www.padippakam.com

பெண்ணடிமை தீராமல் மண்ணடிமை தீராது

# பெண்ணுரிமை

மே - ஆகஸ்ட் '99



பெண்ணே...,
இந்த சமூகத்தைக் கண்ணீரால் கரைக்க இயலாது.
கோபக் கனலால்தான் கழுவ முடியும்.
உன்னுடைய உரிமைகளை கர்ஜனையுடன் கேள்!

படிப்பகம்

www.padippakam.com


# பெண் உரிமை

6 - 4, 5

மே-ஆகஸ்ட் - 99

தனிச் சுற்றுக்கு மட்டும்

நன்கொடை
ரூ. 4.00

ஆண்டு சந்தா
ரூ. 30.00

வெளியீடு...
தமிழ்நாடு
பெண்ணுரிமைக் கழகம்



தொடர்புக்கு ....

அஜிதா
த.பெ. எண். 6937
கே.கே. நகர் தபால் நிலையம்
கே.கே.நகர்
சென்னை - 78


## உள்ளே... பக்கம்


- பெண் உரிமைக்காக ..................... 3
- குருதித் துளிகள் விடுதலை கொடியேற்றும் ..................... 6
- 20 நூற்றாண்டிலும் தேவதாசி முறை ..................... 7
- தர்மபுரி மாவட்டம் ..................... 9
- பொட்டச்சி ..................... 10
- பெண் விடுதலைக்கான மூல வேர்கள் ..................... 11
- இராமராஜ்ஜியம் ..................... 15
- வீட்டு வேலை தொழிலாளர்களின் நேர்காணல் ..................... 16
- சாப விமோசனம் ..................... 20
- முரண் ..................... 25
- எதிரொலிப்பு ..................... 26
- விழித்தெழு ..................... 27
- பெரு பெண்களின் புரட்சிகர பாதை ..................... 28
- ரேசன் கடை போராட்டம் ..... 33
- அறைக்குள் வருமா ஆகாயம் 34
- பாலியல் வன்முறையால் பாதிக்கப்பட்ட இந்தியப் பெண்கள் ..................... 35
- கார்கில் யுத்தம் யாருக்காக? ..................... 40


படிப்பகம்

www.padippakam.com

# பெண் உரிமைக்காக...

**அன்பார்ந்த நண்பர்களே!**

இதோ 13 வது நாடாளுமன்றத் தேர்தல் வந்துவிட்டது. தேர்தலுக்காக கட்சித் தலைவர்கள் ஒருவரையொருவர் திட்டிக் கொள்வதையும், அடித்துக் கொள்வதையும் வானொலி, தொலைக்காட்சி ஒலிபரப்பிக் கொண்டிருக கின்றன. யாரும் பெரும்பாண்மையைப் பெற முடியாது என்ற நிலையில் கூட்டணி சேர நடக்கும் கடும் போட்டியை பத்திரிக்கைகளும் விவரிக் கின்றன.

கடந்த தேர்தல் வந்து 13 மாதங்களே ஆகின்றது. அதற்குள் மக்களின் 900 கோடி ரூபாய் வரிப் பணத்தை விரயம் செய்ய வந்துவிட்டதே தேர்தல்! சென்ற தேர்தலில் எந்த கட்சியும் பெரும் பாண்மையைப் பெற இயலாததைப் போல் இத்தேர்தலிலும் கூட ஒரு கூட்டணி அரசுதான் வரப்போகிறது... மீண்டும் யார் யாரை, எந்த சந்தர்ப்பத்தில் கவிழ்ப்பது என்று காத்துக் கொண்டே இருந்து. சாதகமானசூழ்நிலையில் ஆட்சியை கவிழ்ப்பது கடந்த ஐந்தாண்டுகளாக தேர்தலின் இலக்கணமாக இருக்கின்றது... இந்த தேர்தலிலும்,தேர்தல் முடிவும் இப்படித்தானே இருக்க போகின்றது. இது ஊரறிந்த உண்மை!

பொன்விழா கண்ட 'சுதந்திர' இந்தியாவை இதுவரை காங்கிரஸ்,தேசிய முன்னணி, பி.ஜே.பி மற்றும் கூட்டணி அரசுகள் என்று பல கட்சிகள் ஆட்சிக் கட்டிலில் அமர்ந்துக் கொண்டு சாதித்தது தான் என்ன? போயர்ஸ் ஊழல். மாட்டுத் தீவன ஊழல் ... என்று ஊழல் பெருச்சாளிகளாக இருந்து மக்களை ஏய்த்தார்கள்! அமெரிக்கா, ஜெர்மன்,ஜப்பான் போன்ற ஏகாதிபத்தியங் களுக்கும், பன்னாட்டு நிறுவனங்களுக்கும், நாடு கடந்த நிறுவனங்களுக்கும் இந்திய மக்களின் உழைப்பையும்,வியர்வையையும்,இரத்தத்தையும் கூறுபோட்டு விற்றார்கள்.

50 ஆண்டு 'சுதந்திரமும்' பாராளுமன்ற 'சனநாயக' கொடுத்தப் பரிசு என்ன? ஒவ்வொருவரின் தலை மீதும் சுமார் 35 ரூபாய் கடன்! வேலையில்லா திண்டாட்டம், பசி, பட்டினி ... என்று எண்ணிலடங்கா துயரங்கள்! புதிய பொருளியல் கொள்கையின் விளைவால் வெளியேற்றப்பட்ட லட்சக்கணக் கான தொழிலாளர்கள்! அன்றாடம் தற்கொலை செய்துக் கொள்ளும் விவசாயிகள்! சாதிக் கொடுமையால் எரிந்துக் கொண்டிருக்கும் தலித்துக்கள்! இந்து மதவெறியால் மாய்க்கப் படும் சிறுபாண்மையினர்! போலீஸ் இராணுவத்தால் அன்றாடம் படுகொலை செய்யப்படும் காஷ்மீர்,வடகிழக்கு, பீஹார், ஆந்திர, தண்டகாரண்யாவின் போராடும் மக்கள்!... இப்படி சுரண்டலிலும், ஊழலிலும் மூழ்கித் திளைக்கும் ஆளும் கூட்டம், நமது உரிமைக்காகப் போராடும் மக்களைக் கொன்றுகுவித்து வருவது தானே 50ஆண்டு சனநாயக ஆட்சி! இது தெரிந்த யாராவது வாக்களிப்பார்களா? என்று பல கேள்விக் கணைகள் எழுந்த வண்ணமாக உள்ளது.



படிப்பகம்

www.padippakam.com

பொன்விழா கண்ட 'சுதந்திரநாடு' என்று மார்தட்டி வரும் இந்தியாவில், பெண்களின் நிலைபற்றிச் சொல்லவே வேண்டியதில்லை. பாரம்பரியப் பண்பாடு என்றப் பெயரில் பெண் அடிமையிலும் கேவலமாக நடத்தப் படுகிறாள். மறுபுறமோ, நாகரீகம் என்ற பெயரில் பாலியல் சின்னமாக மாற்றப்பட்டு எண்ணற்ற கொடுமைகளுக்கு ஆளாகிறாள்.

சொத்தில் சம உரிமையின்மை, கூலியிலும் சமத்துவமின்மை, பாலியல் வன்முறைக் கொடுமைகள் என பெண்களின் வாழ்க்கை நரகமாக உள்ளது. இதில், பா.ஜ.க., ஆர்.எஸ்.எஸ் கும்பலின் இந்துத்துவம் பெண்களை பழங்கால அடிமை நிலைக்கு தள்ள முயற்சிக்கின்றது. ஐம்பதாண்டு சுதந்திரத்தின் அத்தனை கொடுமைகளையும் ஆண்களோடுசேர்ந்து அனுபவிக்கும் பெண்ணினத்துக்கு, இவை போனஸ் பரிசுகள்!!

இத்தகைய சூழலில்,அனைத்து ஓட்டுக்கட்சிகளும் "எங்களுக்கு ஓட்டுப் போடுங்கள். அனைத்துப் பிரச்சனை களையும் தீர்ப்போம்' என்கின்றன. (50 ஆண்டுகால பாராளுமன்ற சனநாயக ஆட்சியில் தீர்க்காத இவர்கள், உண்மையில், மக்களின் வாழ்க்கை நிலை மேலும் மோசமாகி உள்ளது!) இப்போது தீர்க்கப் போகிறார்களாம்! இவர்கள் தீர்க்க மாட்டார்கள். ஆனால், ஒடுக்கப்படும் நாம், இக்கொடுமைகளுக்கு முடிவு காண சில விசயங்களைப் புரிந்துக் கொள்ள வேண்டி யுள்ளது. இந்த பாராளுமன்ற முறை யாருக்கானது? இன்று, நமது நாட்டை உண்மையில் ஆண்டு வருவது யார்? மக்கள் கைகளில் அதிகாரம் உள்ளதா? மக்களுடைய வாழ்வை முன்னேற்ற, பெண் விடுதலை அடைய நாம் என்ன செய்வது? போன்ற கேள்விகளுக்கு நாம் பதில் காண வேண்டும்.



யாருங்க. எங்க கட்சில ரௌடிங்க இருக்காங்கன்னு சொன்னது. தைரியம் இருந்தா என் முன்னால் வந்து சொல்ல சொல்லுங்க

நாம் இப்போது தான் தேர்தலில் நமது நிலைபற்றியும், நமது உண்மை விடுதலைக்கான பாதை பற்றியும் தெளிவு பெற முடியும்.

இந்த 50 ஆண்டுகளாக நாட்டின் வளங்களைச் சூறையாடி அனைத்துப் பலன்களையும் அனுபவித்து வருபவர்கள், நிலப் பிரபுக்கள், தரகு முதலாளிகள், அதிகார வர்க்கம், ஏகாதி பத்தியங்கள் ஆகியோர்தான்! சாதரண மக்கள் பஞ்சத்திலும் பட்டினியிலும் வருந்தி சாகும்போது கோடி கோடியாய் செல்வம் சேர்த்து நமது வியர்வையை மொத்தமாக உறிஞ்சிக் குடிப்பவர்கள் இவர்கள்



படிப்பகம்

www.padippakam.com

தான் பெண்ணடிமைத் தனத்தைப் பயன்படுத்தி குறைந்த கூலி, பாலியல் சுரண்டல் மூலம் லாபமடைவதுடன், பெண்களைப் பாலியல் சின்னமாக்கி ஈனத்தனமான வியாபாரம் நடத்துவதும் இவர்கள்தான்! இந்த ஆளும் கூட்டத்தின் அரசியல் பிரதிநிதிகளே ஓட்டுக்கட்சிகள்! நாடாளுமன்றம், சட்டமன்றங்களை ஆட்டிப் படைப்பது மேற்கூறிய பண முதலைகள் தான். நாடாளுமன்றம் இல்லாமல் கூட அதிகார வர்க்கத்தைக் கொண்டு ராணுவ ஆட்சி நடத்தவும் இவர்களால் முடியும் ஓட்டுப் போடும் சனநாயக உரிமை நமக்கு உள்ளதாகக் கூறுகிறார்கள். ஆனால், உண்மையில் இவர்களின் எடுபிடிகளில் யாராவது ஒருவரை தேர்ந்தெடுக்கவே இந்த ஓட்டுரிமை! குறைந்த பட்சம் இந்த அயோக்கியர்களைத் திருப்பி அழைக்கும் உரிமைக் கூட மக்களுக்கு இல்லை. இந்த நாடாளுமன்றம் ஏகாதிபத்திய, நிலப் பிரபுத்துவ, தரகுமுதலாளிய ஆளும் வர்க்கங்களின் ஆட்சியைநியாயப் படுத்தும போலி சனநாயகக் கருவியே என்பதைப் புரிந்து கொண்டால் இந்தத் தேர்தல் நாடகத்தின் மோசடி நமக்கு நன்றாக விளங்கும்.



**சட்டசபைன்னா மக்கள் கஷ்டங்கள் பத்தி பேசறதுன்னு நெனச்சேன்...! ஆனா, மந்திரிங்க் எம்.எல்.ஏங்க சண்டை போட்டுக்குற இடம் போல...!!**

மக்களை படுகுழியில் தள்ளும் இந்தக் கொடுமைக் காரர்களின் சுரண்டலை ஒழிக்காமல் நாடு முன்னேற முடியாது. பெண்களும் தமது விடுதலையை நோக்கி முன்னேற முடியாது. ஒட்டுமொத்த சமூக அமைப்பையே தூக்கி யெறிந்து மக்கள் சனநாயக சமூகத்தைப் படைக்கும் போதுதான் அனைத்துக் கொடுமைகளுக்கும் முடிவு கட்ட முடியும். அதாவது, உழைக்கும் வர்க்கத்தின் கையில் அதிகாரம் வரும்போதுதான், மக்களுக்கு சுரண்டலிலிருந்து விடுதலை கிடைக்கும். புதிய சனநாயக சமூகத்தில்தான் மக்களுக்கு சனநாயகமும், பெண்களுக்கு தமது விடுதலையைநோக்கி முன்னேற வாய்ப்பும் கிடைக்கும். அத்தகைய புதிய சனநாயக சமுதாயம் படைப்பதற்கான போராட்டத்தில் அணிதிரள வேண்டும்.

சமூக மாற்றத்திற்கான போராட்டத்தில் மிக முக்கியமான விசயம்,இந்தப் பாராளுமன்றத்தின் போலி சனநாயக வேடத்தை நாம் புரிந்து கொள்வதுதான். இதில் நல்லவர்கள் போல் உட்கார்ந்தாலும்)அப்படி உட்கார முடியுமா என்பது வேறுவிசயம்!!) 33% பெண்கள் இடம் பெற்றாலும் சரி, இந்த சமூக அமைப்பின் சுரண்டல் தன்மையை மாற்ற முடியாது. ஆணாதிக்கமும் அதன்



படிப்பகம்

www.padippakam.com

கொடுமைகளும் ஒழியாது. எனவே இந்தத் தேர்தல் நம்மை எந்த சுரண்டல் கும்பல் ஆள்வது என்பதற்கு நாம் தரும் ஒப்புதல் தானன்றி வேறல்ல. இந்த கேடுகெட்ட சமுதாயமும் கொடுமைகளும் தொடருவதை நாம் ஏற்றுக் கொள்வதுதானன்றி வேறல்ல! பெண்ணடிமைத்தனமும், பெண்கள் மீதான கொடுமை களும் நீடித்து வர நாம் வழங்கும் அனுமதியேயன்றி வேறல்ல!

அன்பார்ந்த தோழர்களே! பெண்களே! பொதுமக்களே!

நாம் இந்த சுரண்டல் ஆட்சிக்கு முடிவு கட்டி சமூக மாற்றத்துக்கும் பெண் விடுதலைக்குமான பாதையில் முன்னேறுவோம்! போலி சனநாயகத் தேர்தலைப் புறக்கணிப்போம்! இதை அம்பலப்படுத்தி மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தி, புதிய சனநாயக சமுதாயம் படைக்க அணிதிரள் வோம்!

– ஆசிரியர் குழு

## குருதித் துளிகள் விடுதலை கொடியேற்றும்

⁕ கொசாவோ
தேசிய இனத்தின்
உரிமைப் போரட்டமாய்
வெடித்தது – கிடைத்ததோ
கொடுமையின் குரூரத்தாக்கல்

⁕ சுதந்திர ஆக்சிஜனை
சுவாசிக்கிறேன் என்றோர்க்கு
அமெரிக்க ஏகாதிபத்திய
கார்பன்–டை– ஆக்சைடின் வலிமையால்
நுரையீரலும் நொறுக்கப்படுகிறது

⁕ அரசின் ஆணைகளுக்கு
வித்தைகாட்டுபவனின் குரங்காய்
ஆட்டம்போடும் சிப்பாய்க்கு
பாலியல் வன்முறைசெய்ய
தடையேதும் இல்லை.

⁕ இலங்கை, போஸ்னியா, கொசாவோ
காஷ்மீரம் எனத் தொடர்ந்து
இரணகளத்தில் பெண்களே
இரணங்களாய்.....

⁕ குருதியின் நெடியும்
கமகம வாசமென்று
வயிற்றுப் பசியும் ஓலமும்
சிருங்கார கீதமென்று
உடல்பசிக்கு அலையும் வல்லூறுகள்

⁕ சிக்கியும் தப்பியும்
சிதிலமடைகிறது – ஓர் இனம்
இனவெறித் தாக்குதல்
கொசாவோ மக்கள்மீது
இன்று
ஆயுதம் ஏந்தி அணிவகுப்பில்
ஆண்களும் பெண்களும்

⁕ ஏமாற்றம் போதும்
பலவீனம் துடைத்தெறி
பலங்களின் துணையொடு
அடக்குமுறை அனைத்தையும்
அடியொடு ஒழிப்போம்.

⁕ கொசவா மங்கைகளே
ஈனசுரங்கள் தவிர்த்து
போர்க்குரல் கொடுங்கள்
உங்களுக்குத் தோள்கொடுக்க
உலகப் பெண்கள் ஓரணியில்....

– பொன்னி



படிப்பகம்

www.padippakam.com

# 20ம் நூற்றாண்டிலும் தொடரும் தேவதாசிமுறை!

நிலவுடமைச் சமுதாயக் கூட்டமைப்பு ஒழுக்கம், கற்பு இரண்டையும் பெண்கள் மீது திணித்தது. இதிலிருந்து குழந்தை திருமணம், உடன்கட்டை ஏறல், கைம்மை நோன்பு முதலான அடிமைச் சங்கிலிகள் கிளைத்தன.

பெண்களுக்கு கற்பு நெறியை வலியுறுத்தும் அதே சமூக நியதியும் மதமும் தான் மேல்தட்டு ஆண்களின் பாலியல் வெறியை தீர்ப்பதற்காக தேவதாசி முறையை ஆண்டவன் பெயரால் நடைமுறைப்படுத்துகின்றது.

ஆணாதிக்க சமுதாயம் தங்கள் குடும்ப பெண்களின் கற்புக்குக் களங்கம் வராமல், அதேசமயம் ஒடுக்கப்பட்ட பெண்களை பாலியல் இச்சைக்கு பலியாக்கியது. உயர்மட்ட ஆண்கள் தங்கள் தேவைக்கு இவர்களை பலியாக்கினர். இதற்கு இந்து மதம் வலிமையான ஆதரவையும் அளித்து துணை நிற்கின்றது.

இன்றைய அரைநிலவுடமை=அரைகாலனிய சமுகம் 'ஜனநாயக' வழியில் செல்லரித்த சட்டங்களால் உடன்கட்டை ஏறுவதையும், குழந்தைத் திருமணத்தையும், தேவதாசி முறையையும் ஒழித்து விட்டோம் என்று கூக்குரலிடுகின்றது! ஆனால் யதார்த்தத்தில், 'ஜனநாயகத்தின் செல்லரித்த சட்டங்களால் இன்றும் தேவதாசி முறை நடைபெற்று வருகிறது. **அதற்கு சான்று, கர்நாடக மாநிலத்தில், சௌகாத்தி என்ற ஊரில் ஜம்தக்கினி என்ற ஆண் கடவுளுக்கு பால் மணம் மாறாத பெண் குழந்தைகளை திருமணம் செய்து வைக்கின்றனர். திருமணம் என்ற பெயரில் பெண் இங்கு தேவதாசி என்று பொட்டுக் கட்டப்படுகிறாள்.**



**பிச்சையெடுக்கும் தேவதாசி சிறுமி**

தென்னிந்தியாவில் தலைமுடி அழுக்கினால் கற்றையாய் ஒட்டிக் கொண்டிருந்தால், 'சாமி முடி விழுந்திருக்கிறது" என்று நம்புகிறார்கள். அவ்வாறு சாமி முடிவிழுந்த (தேவதாசி கூந்தல்) பெண் குழந்தைக்கும் பொட்டுக் கட்டுகின்றனர்.



படிப்பகம்

www.padippakam.com

அங்கு பொட்டுக் கட்டப்படும் பெண் பூசாரியிடம்,'என் நினைவு இருக்கும் வரை ஜம்தகினி தான் என் கணவன். நான் மனிதப்பிறவி யாரையும் இனி திருமணம் செய்துக்கொள்ள மாட்டேன். ஏனென்றால், நான் இன்று முதல் தெய்வப் பிறவி. அப்படி மீறிச் செய்துக் கொண்டால் நான் இரத்தம் கக்கி சாவேன்"என்று உறுதியேற்க வேண்டும்.

இவ்வாறு உறுதி எடுத்துக் கொண்டவள், அடுத்த நிமிடமே (திருமணம் என்ற பெயரில் ஒருவனுக்கு மட்டும் பாலியல் இன்பம் வழங்குவதற்குப்பதில்) உள்ளூர் பணக்காரர்களின் பள்ளியறைக்கு அழைத்து செல்லப்படுகிறாள். தனக்கு என்ன நிகழ்கிறது என்று உணர்ந்து கொள்ள இயலாத பத்து முதல் பதிமூன்று வயதுக் குட்பட்ட சிறுமிகள் மீளாத்துயரில் சிக்குகின்றனர்.

இப்பெண்கள் பின் தன் அத்தியாவசிய செலவுக்காக உடலையே முதலீடாக்க வேண்டியிருக்கிறது. அவ்வாறு உடலை முதலீடாக்க இயலவில்லை எனில், பிச்சை எடுத்து வயிற்றைக் கழுவிக் கொள்கின்றனர்.

இங்கு பொட்டுக்கட்டப்படும் பெண்கள் மும்பை,கல்கத்தா. டெல்லி, பூனாச் சிவப்பு (விளக்குப்பகுதி) முதலான நகரங்களுக்கும் தொழில் செய்ய விற்கப்படுகின்றனர். இதற்குச் சான்று கர்நாடகத்தைச் சார்ந்த மந்திரா மிராஜ் என்ற பெண்! வயதுக்குவந்த சில தினங்களே ஆன மந்திரா ஜம்தக்கினி ஆலயத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டாள். அங்கு உயிருடன் இருந்த ஆட்டின் தலையை அறுத்து ஆட்டின் இரத்தத்தால் அவள் குளிப்பாட்டப்பட்டாள். பின் மஞ்சள், வேப்பிலை கலந்த நீரில் அப்படியே முக்கி எடுக்கப்பட்டாள்.

இந்த அதிர்ச்சியிலிருந்துஅவள் மீளுவதற்குள் ,பணக்காரன் ஒருவன் முன்னிலையில் ஜம்தக்னியின் மனைவி என்று உறுதியேற்றாள். பின் அப்பணக்கார மிருகத்தின் படுக்கையறைக்கு அழைத்துச் செல்லப்பட்டாள். அங்கு அவள் சீரழிக்கப்பட்டாள். அப்பொழுதுதான், மற்ற சிறுமிகளை விட வேறானவள் பெற்றவர்களாலேயே தான், விற்கப்பட்டோம் என்று புரிகிறது.

மந்திரா மிராஜ் 28=வயதில்செக்ஸ் தொழிலாளியாக மாறிவிட்டாள். தற்போது, அவளுக்கு 15 வயதில் மகள் இருக்கிறாள். தான் பட்டதுயரிலிருந்து விடுபட முடியாத மந்திராவின் மகளும் சமுகத்தில் முத்திரை குத்தப்பட்டுவிட்டாள். அவளுக்கான முன்னேற்றப்பாதைகள் அடைக்கப்பட்டு, மந்திராவின் மகளும் இன்று ஜம்தக்கினியின் மனைவியாக மாற்றப்பட்டு விட்டாள்.

சுதந்திரம் பெற்று விட்டோம் மக்கள் நலனுக்காக சட்டம் இயற்றிவிட்டோம் என்று ஜனநாயகமாக கூக்குரல் விடும் அரசியல் வாதிகளால் இன்றும் செக்ஸ் தொழிலுக்கு மறைமுக ஆதரவு அளிக்கப்பட்டு அமோகமாய் பலப்பல புதுப்பெயர் களுடன் பவனிவருவதை இந்த சம்பவம் விவரிக்கிறது! (சௌகாத்தியில் மட்டுமே ஆண்டொன்றுக்கு 500 பெண் குழந்தைகள் பொட்டுக்கட்டப்படுகின்றனர் என்றால் இந்தியா முழுவதும் எத்தனை பேர் இத்தொழிலில் திணிக்கப்படுவார் களோ? இத்தகுக் கொடுஞ்செயல்களிலிருந்து சமுகம் விழித்தெழும் நாள் வெகு தொலைவில் இல்லை!

= பொன்னி.



படிப்பகம்

www.padippakam.com

# வேலை அறிக்கை - தர்மபுரி மாவட்டம்

மலரை நுகர்ந்து விட்டு கசக்கி எறிவது போல், பல வகை உணவுபொருளை ருசி பார்ப்பது போல் எத்தனை பெண் களையும் அனுபவித்து விட்டு விடலாம். யாரும் கேட்க முடியாது என்ற ஆணவத்தால் நடமாடும் இந்த ஆணாதிக்க சமூகத்தில் பெண்கள் அவமானம் தாங்க முடியாமல் தற்கொலை செய்து கொள்வதும் அல்லது முடிந்தால் மறைத்து விட்டு செல்லும் இந்த சூழலில் பாதிக்கப்பட்ட பெண் முத்து நமது அமைப்பை நாடி வந்தார்.

4 ஆண்டுகளாக கோவிந்தன் என்பவரிடம் நெருக்கமாக இருந்தது அனைவருக்கும் தெரிந்ததே! பிறர் திருமணம் செய்ய வரும் போது கோவிந்தன் கொடுத்த உறுதியான வாக்குறுதியை நம்பி பிறரை திருமணம் செய்ய மறுத்து விட்டார். கர்ப்பமாகிய சூழலில் இருந்த முத்துவிடம் "எனது முறைப் பெண்ணை திருமணம் செய்துவிட்டு இரண்டாவது தாராமாக உன்னை திருமணம் செய்து கொள்கிறேன்' என்று கூறவே அதிர்ச்சியடைந்த முத்து, பெண் உரிமை கழகத்தில் தனது கோரிக்கையை வைத்தார். பாதிக்கப்பட்டவருக்கு நியாயம் கிடைக்கபோராட ஆதரவு சக்திகள்ள அணிதிரட்டினர். அனைவரிடமும் தனக்கு நியாயம் வேண்டும் என கேட்க பெண்களும், இளைஞர்களும் கொதித்தெழுந்து மறுநாள் பிரச்சனையை பேசலாம் என முடிவெடுத்தனர்.

போராட்ட கோலத்தை காணத் துடித்து நாங்கள் மறுநாள் எப்போது விடியும் என காத்திருந்தோம். விடிந்ததும் பெண் உரிமை கழக தலைமையில் பெண் பிரச்சனை மக்கள் மத்தியில் வைக்கப்பட்டது. பெண்களை ஏமாற்றுபவர்களுக்கு ஒரு பாட மாக இருக்க வேண்டுமென்றும் நமது ஊர் சுற்றப்புற கிராமங் களுக்கு முன்னோடியாக இருக்க வேண்டுமென்ற நோக்கத் துடன், கோவிந்தனிடம் நட்பு ரீதியாக பேசி புரிய வைத்தும், அவள் நடத்தை கெட்டவள் என கூறி மறுக்கவே, மக்கள் ஆதர வோடு கர்ப்பமாக இருந்த முத்துவை திருமணம் செய்து கொள் ளுமாறு வலியுறுத்தி திருமணம் செய்து வைத்தோம்.

நான்காண்டு கால பிரச்சனையை உடனே தீர்த்ததால், மக்கள் ஒன்று சேர்ந்தால், சரியான அமைப்பின் கீழ்அணி திரண்டால் எந்த பிரச்சனைக்கும் தீர்வு காண முடியும் என்ற நம்பிக்கையுடன் போராட்ட உணர்வை நெஞ்சில் சுமந்து சென்றோம்.

தர்மபுரி மாவட்டம் கொண்டம் பட்டி கிராமத்தில் ஐஸ்கூல் மாணவன் 9 \ வது வகுப்பு படிக்கும் சென்னம்மாவை திருமணம் செய்து கொள்கிறேன் என்று உறுதி கூறவே அவன் விருப்பத்துக்கு பலியாகி விட்டார். பெண்ணின் பெற்றோர் ஊர் தலைவர்களிடம் சொல்ல ஊர் கூட்டம் கூடி நியாயம் கேட்கும் போது, தவறு செய்தவன் இல்லை என மறுத்து விட்டான். இத்தகைய சூழலில் ஊரார்பையனுக்கு ஏற்கனவேபொண்ணு கொடுப்பதாக பேசியிருந்த ஊருக்கு சென்று பொண்ணு கொடுக்கக் கூடாது என்று கூறிவிட்டு வந்தனர். நமது அமைப்புக்கு தகவல் கிடைத்ததும், உள்ளூரிலும், சுற்று புறங்களிலுமுள்ள ஜனநாயக சக்திகளை அணிதிரட்டி பேசினோம். அனைவரும் ஒரே மனதாக பாதிக்கப் பட்ட பெண்ணுக்கு



படிப்பகம்

www.padippakam.com

ஆதரவு அளிப்பதாகவும், நியாயத்துக்காக போராட வேண்டுமென முடிவெடுத்தனர்.

மறுநாள் ஊரில், ஏமாற்றியவன் வேறு எந்த பெண்ணையும் திருமணம் செய்யக்கூடாது என எச்சரித்து விட்டு, பெண்ணடிமைத்தனத்தை உடைத்தெறிந்தால் மட்டுமே இத்தகைய பிரச்சனைகள் தீரும். இந்த சமூகம் மாறும் போது மட்டுமே பெண் மதிக்கப் படுவதும் பெண்ணுக்கு விடுதலை கிடைப்பதும் சாத்தியம் என்று கூறி 2 இடங்களில் பிரசாரம் செய்யப்பட்டது.

# பொட்டச்சி

**–தேவிகாந்தன்**

- தொப்புள் கொடியை அறுத்தபடியே...
  'இதுவும் பொட்டை' இளக்காரம் தொனிக்க
  எனது பிறப்பின் துக்கச் செய்தியை
  மருத்துவச்சி கசப்புடன் சொன்னாள்!

- பக்கத்தில் இருந்த பாட்டியோ ...
  முகத்தைத் திருப்பித் தோளில் இடித்தாள்!

- காம வேட்கையில் கருவைக் கொடுத்த
  அப்பன் முகத்திலும் அலட்சியம் தெரிந்தது!

- பெற்றவள் கூட எனது பசிக்கு
  முலைக்காம்பினை மூடியே மறைத்தாள்!

- பொட்டைக் கழுதைக்குப் படிப்பெதற்கு–
  பள்ளிக்கூடமும் பகையாய் போனது!

- வாசல் கூட்டிக் கோலம் போட்டு
  பாத்திரம் தேய்த்து சமைக்கக் கற்று
  சமைந்து நின்றேன்
  அப்பாவுக்குக் கவலை தொற்றிக் கொண்டது!

- எனக்கோ ...
  கழுத்தை நீட்டியவள் வயிற்றை நிறைத்தால்...
  பொட்டச்சி பிறப்பாள்...
  இப்போதே பயம் பற்றிக் கொண்டது!

–நன்றி தினமணிக்கதிர்.



படிப்பகம்

www.padippakam.com

# பெண் விடுதலைக்கான மூலவேர்கள்

தேன்மொழி

சமீபத்தில் பிரச்சாரம் செய்துக் கொண்டிருந்த போது,பெண் உரிமையா? பெண் உரிமைன்னு பேசியே ஜெயா,சோனியா மாயாவதி கூட்டணி நாட்டையே சீர்குலைத்து விட்டார்களே? நீங்களும் பெண் உரிமை, பெண்விடுதலை பற்றி பேச வந்துட்டீங்களா ...? பொம்பளைங்களுடைய ஆட்சியை தான் பார்தோமே? இன்னமுமா பெண் உரிமை ...? என்று பல பிரச்சனைகளில் உழன்று கொண்டிருக்கும் பெரும்பான்மையான பெண்களின் அழுகுரலை மறந்துவிட்டு பெண் உரிமையை பற்றி நையாண்டித் தனமாக ஒரு சிலர் பேசினர், மற்றொருப் பிரிவினர் இந்த சீர்கெட்ட சமூகத்திலே ஒவ்வொருவரும் உணர்வுப் பூர்வமாக உணர்ந்து தன்னை மாற்றிக் கொண்டாலே பெண் விடுதலை கிடைத்துவிடும் என்று வாதிடுகின்றனர்.

இப்படி, பலர் பெண் உரிமை, பெண் விடுதலைப் பற்றி பலக் கருத்துக்களை வெளிப்படுத்துகின்றனர். ஆனால், யதார்த்தத்தில் இவர்கள் கூறுவது தான் பெண் உரிமையா? உணர்வுபூர்வமான மாற்றம் தான் பெண் விடுதலை அடைய வழி வகுக்குமா? ஒரு ஆணோ,பெண்ணோ உணர்வு ரீதியாக உணர்ந்தாலும் இந்த சீர்கெட்ட சமூகம் தான் அவரின் எண்ணங்களை, மாற்றங்களை அங்கீகரிக்குமா? இந்த சமூகத்திலே சில சீர்திருத்தங்கள் செய்வதால் மட்டுமே பெண் விடுதலை அடைய முடியுமா? என்றுக் கேள்விகள் எழுந்த வண்ணமாக உள்ளன. இதுபோன்ற கருத்துக்களை தெளிவுப்படுத்த வேண்டிய அவசியம் நம்முன் உள்ளது.

எனவே, பெண் உரிமை என்பது என்ன? பெண் விடு தலையை அடைவது எப்படி? என்பது பற்றி த.பெ.க.வின் நிலைபாட்டை விரிவாகப் பார்ப்போம். ஆனால், பெண் விடுதலையை அடையும் வழியைப் பற்றி விவாதிக்குமுன் இந்தியாவில் பல்லாண்டுகளாக பெண்ணடிமைத்தனம் ஆழமாக வேரூன்றியுள்ளதன் வரலாற்றுப் பின்னனியை பார்க்க வேண்டிய இன்றியமையாதத் தேவை உள்ளது. இப்படி அலசி ஆய்வுக்குட்படுத்திப் பார்த்தால் தான், பெண் விடுதலைக்கு தடையாக உள்ளக் காரணிகளை தெளிவாகப் புரிந்துக் கொண்டு சமூக மாற்றத்திற்கான தேவையை உணர்ந்து பெண் விடுதலை அடைவதற்கான வழிகளை நோக்கி வீறுகொண்டு செல்ல முடியும். ஆதலால், முதலில் பெண்ணடிமைத்தனத்தின் ஆணி வேர்களை அலசிப் பார்ப்போம்!

**பெண்ணடிமைதனத்தின் வரவாற்றுப் பின்னனி :**

வரலாறு என்று குறிப்பிடும்போது நம் பாடபுத்தகம் இதுவரை அரசன் ஆண்டதைப் பற்றியும், அவனின் பெருமையையும் சீர்திருத்தங்களையுமே



படிப்பகம்

www.padippakam.com

விளக்குவதை படித்துள்ளோம்! இந்த புத்தகங்கள் இந்த வரலாற்றுக் காலக் கட்டங்களில் மக்களின் வாழ்நிலையை பற்றியோ, பெண்களின் நிலையை பற்றியோ எவ்விதத் தகவலையும் கொடுக்க மறுத்துள்ளது. எனவே தான், நாமும் ஆட்சியாளர்களின் கூற்றுப்படி அரசனின் வாழ்நிலையைப் பற்றியே கவலைக் கொண்டு கற்பனை உலகத்திலேயே மிதக்க வேண்டிய நிா பந்தத்தில் தள்ளப்பட்டுள்ளோம்!

ஆனால், இலக்கியங்கள், பட்டையங்கள், கல்வெட்டுகள், காசுகள், ஓலைச் சுவடிகள், புதை பொருள் ஆராய்ச்சி, மற்றும் மனிதனின் பழக்க வழக்கங்கள், திருமண முறை, சடங்குகள், மனிதனால் உருவாக்கப்பட்ட சிற்பங்கள், தெய்வங்கள், வழிபாட்டு முறை போன்றவை நமக்கு ஆதாரப்பூர்வமாக சில வரலாற்றுத் தகவல்களைத் தருகின்றன. இந்த வரலாற்று தடயங்களை வைத்தும் வரலாற்று சமூக பொருளாதார ஆய்வு நூல் களிலிருந்தும் கிடைத்த தகவல்களிலிருந்து இந்தியாவில் பெண்ணடிமைத்தனம் வேறூன்றி வளர்ந்ததின் பின்னணியை அலசிப் பார்ப்போம்.

புராதன கம்யூனிஸ காலத்தில் பெண்ணே மனித இனத்துக்கு தலைவியாகக் கருதப்பட்டாள். பழைய கற்காலமான இக்கட்டத்தில் உணவு தேடுதலும், வேட்டையாடுதலுமே பிரதான அம்சங்களாயிருந்தன. பெண்ணே இரையைத் தேடி வேட்டைக்கு சென்ற போது தலை வியாக இருந்தாள். இந்தக் கட்டத்தில், குடும்பமோ, அரசோ, சொத்தோ எதுவுமேக் கிடையாது. இந்த காலக் கட்டத்தில் தான் சமூக உற்பத்தியில் பெண்கள் பெரும்பங்காற்றினர். இந்த காலக்கட்டம் சமூக தாய்வழி சமுதாயம் என்றும் அழைக்கப்பட்டது.

இக்காலத்தின் பின்பகுதியில் வேட்டையாடுதல், மிருகங்களை வளர்த் தலுக்கும், உணவு தேடுதல் விவசாயத்திற்கும் மாற்றம் கண்டன. இது மக்களின் பொருளாதார முன்னேற்றத்தை ஏற்படுத்தியது. இக்காலக்கட்டம் புதிய கற்காலம், உலோகக் காலம் எனப்பட்டது. இந்தக் கட்டத்தில் கால்நடை களும், ஆடு வளர்த்தலும் ஆணின் பொருளியல் வலிமையாகத் திகழ்ந்தன. உற்பத்தி முறைகள் வளர்ச்சியடைய ஆரம்பித்தவுடன் தேவைக்கு அதிகமான உற்பத்தியும் செய்யப்பட்டது. ஆண்/பெண் என்று பாலியல் அடிப்படையில் இரு பிரிவுகள் இருப்பது மட்டுமல்லாமல், உற்பத்தி அதிகரிக்க அதிகரிக்க சொத்துக்களை உடைமையாகக் கொண்டு உற்பத்தியைக் கட்டுபடுத்தும் பிரிவு என்றும் சொத்துடமை அற்ற உழைக்கும் மக்கள் பிரிவு என்றும் இரண்டுப் பிரிவுகளாக மனிதர்கள் பிரிக்கப்பட்டனர். அதாவது, சுரண்டும் வர்க்கம், சுரண்டப்படும் வர்க்கம் என்று இரு கூறுகளாகியது. **கி.பி 3000 வாக்கில் இந்தியாவில், பஞ்சாப், இராஜஸ்தான் உள்ளடக்கிய சிந்து ஆற்றுப்படுக்கை சமவெளியில், முதல் வர்க்க சமூகம் தோன்றியது. இது ஆணாதிக்கத்தை பலப்படுத்தி தாயுரிமையைக் கீழிறக்கியது.** ஆண்களின் ஆளுமைக்குட்பட்டிருந்த விலங்குகள் பராமரித்தல், பெண்களின் பொறுப் பிலிருந்து விவசாயத்தோடு இணைய வழிவகுத்தது. ஏர் உழவை அடிப்படையலாகக் கொண்ட விவசாய உற்பத்தியில் பெண்களுக்கிருந்தப்பங்கை ஆண்கள் ஆக்கிரமிப்பு செய்ய ஆரம்


படிப்பகம்

www.padippakam.com

பித்தனர். பின், விவசாயமும் வேட்டையாடுதலும் ஆண்களுக்கே உரியதாக மாற்றப்பட்டது. குழந்தை பராமரிப்பு,சமையல் வேலை மற்றும் கால்நடை பாதுகாப்பு போன்ற வேலைகள் தான் பெண்களுக்குக் கொடுக்கப்பட்டது. விவசாயத்தின் முக்கியத்துவம் அதிகமடைய அதிகமடைய தாய் வழி சமூகம் தந்தை வழி சமூகமாக மாறியது.

அதிகமாக சொத்தை திரட்டி தனி சொத்துரிமையை ஆணே பெற்றதால், ஆணுக்கே முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. மனிதன் தான் தேவைக்கு அதிகமாக உற்பத்தி செய்தது தன் சந்ததியினரை சென்றடைய குடும்பம் என்ற அமைப்பை உருவாக்கினான். இம்மாற்றங்கள் தான் பெண்ணை சமுதாய தளத்திலிருந்து விலக்கி இல்வாழ்க்கை என்ற சிறைக்குள் பலவந்தமாக தள்ளியது இன்றளவும் குடும்ப நுகத்தடியின் கீழ் துன்பப்படவும் வழி வகுத்தது. ஆணே குடும்பத்தின் சர்வாதிகாரி ஆனான். திருமண முடிச்சுகள் மிகவும் வலுவாக்கப்பட்டு ஆணிற்கே இம்முடிச்சை அழிக்கும் உரிமை கொடுக்கப்பட்டது. ஒரு தார மண குடும்பத்தில் ஆணின் காம இச்சையை பூர்த்தி செய்யும் படுக்கையறைப் பாவையாக பெண் பயன்படுத்தப் பட்டாள். வீட்டின் வேலைக்காரியாகவும், ஊதியமற்ற உழைப்பாளியாகவும் பெண் மாற்றப்பட்டாள். சமூக உற்பத்தியில் பெண்ணிற்கு பங்களிப்பு கொடுக்கப்படவில்லை. அவளின் உடலின் மீது எவ்வித கட்டுப்பாடும் இல்லாமல் குழந்தையைப் பெற்றெடுத்தல், வளர்த்தல் போன்றவற்றை செய்பவளாகவே மாற்றப்பட்டாள் பெண்ணை விட ஆண் அறிவுப் பூர்வமாகவும் உடல் ரீதியாகவும் ஒழுக்கத்திலும் உயர்ந்தவனாகக் கருதப் பட்டான்.

எனவே மேற்கண்ட விசயங்களைப் பார்க்கும்போது, **தனி சொத்தின் விளைவாகத் தோன்றிய வர்க்கங்களின் தோற்றத் தோடு ஆணாதிக்கமும் தோன்றியிருக்கின்றது.**

**ஆதலால், ஆணாதிக்கத்தின் ஆணிவேரான வர்க்க சமூகத்தை வீழ்த்தும் போது மட்டுமே பெண்விடுதலை சாத்திய மாகின்றது!**

நிலவுடமை சமூகம் மேற்கூறிய பெண்ணடிமைதனத்தை உறுதிப் படுத்தியதுடன் மட்டுமல்லாமல் மேலும் தீவிரப்படுத்தியது இந்துமத வளர்ச்சி, சமூக உறவு முறை, சொத்துரிமை மற்றும் தர்ம சாஸ்த்திரங்கள் ஆணாதிக்க ஆட்சியை நிலைபெற செய்தது. பெண்கள் விலங்குகளுக்கு சமமானவர்கள் என்று மனுதர்ம சாஸ்திரம் கூறுகிறது. அவர்களுக்குச் சொத்துரிமை மறுக்கப்பட வேண்டுமென்கிறது. இதற்கு மாறாக, பெண்களை இளம் வயதில் தந்தைக்கும்,திருமணமானப் பின் கணவனுக்கும், முதிய காலத்தில் மகனுக்கும் அடிமையாகவும், கணவனே கண்கண்ட தெய்வம்' 'கல்லானாலும் கணவன், புல்லானாலும் புருசன்' என்று கணவனையே நினைத்தவளாக இருக்கப் பணித்தது. விதவை மனம் தடைச் செய்யப்பட்டிருந்தது. சூத்திரர்களைப் போலவே பெண்களுக்கு கல்வி கொடுக்ககூடாதென்றும், சாஸ்திரங்கள் கூட அவளுக்கு முன்னால் உச்சரிக்கக்கூடாது என்கின்றது மனுதர்மம்! தப்பித்தவறி ஏதாவது ஒரு பெண், சாஸ்திரங்களை கற்றுக் கொள்வது கண்டுபிடிக்



படிப்பகம்

www.padippakam.com

கப்பட்டால் தண்டனையாக அவளது காதுகளில் ஈயம் உருக்கிவிடப்பட வேண்டும் என்றக் கருத்தை வெளிப்படுத்தியது மனுதர்ம சாஸ்திரம்!

தர்ம சாஸ்திரத்திலுள்ள அனைத்து நிலபிரபுத்துவ, ஆணாதிக்க மதிப்பீடுகளும் இராமாயணத்தில் இடம் பெற்றுள்ளன. பிராமணியமும் இந்துமதமும் இவை அனைத்தையும் புனிதப்படுத்தியுள்ளது, இக்கட்டத்தில் வந்த வேதங்கள். உபநிடதங்கள் பெண்ணை இரண்டாம்தர மனித இனமாகக் கூறியது. பெண்கள் மனித உருவான கணவனை, கடவுளாக வழிபட சத்திய நாராயணா பூசையை நடத்தி கணவன் கடவுளின் மறு அவதாரமென்ற ஆணாதிக்க கருத்து இக்கட்டத்தில் பரப்பப்பட்டது. இது இன்றளவும் கடைபிடிக்கப்படுகிறது. பெண்களை மிகவும் கேவலப்படுத்தக்கூடிய கொடுமைகளான தேவதாசி முறை, குழந்தைத் திருமணம், உடன்கட்டை ஏறுதல் போன்றவை அரை நிலவுடமை சமூகத்தில் தொடர்ந்து நீடித்துவந்தன.

இக்கட்டத்தில் பெண்களை இரண்டாம்தர குடிமக்களாகக் கருதும் நிலபிரபுவும் தன் பங்கிற்கு பெண்களின் உழைப்பை ஒட்டப் பிழிந்து விட்டு கூலி ஏதும் தராமல் தனக்குப் பெறும் ஆதாயத்தைப் பெறத் துவங்கினான். ஏழை விவசாயப் பெண்களின் கூலியை சுரண்டி தன்னைநிலை பெற செய்து கொண்ட நிலப்பிரபுத்துவம், தனக்கு பக்கபலமாக ஆணாதிக் கத்தை தூக்கி நிறுத்திக் கொண்டு, பெண்களுக்கு சொத்துரிமையை வழங்க மறுப்பதன் மூலம் பெண்ணின் பொருளியல் சுதந்திரத்தை மறுக்கிறது.

18 ஆம் நூற்றாண்டின், மத்தியில் ஆங்கிலேயர்கள் இந்தியாவைத் தங்களது காலனியாக மாற்றத் தொடங்கினர். இந்திய மக்களின் கோபத்திற்கும், தாக்குதல்களுக்கும் உள்ளான நிலப்பிரபுத்துவ சக்திகளை நம்பி அவர்களின் உதவியுடன் இந்தியாவில் காலடி வைத்து, இந்தியநிலப்பிரபுத்துவத்தின் ஆணாதிக்க ஒடுக்குமுறை உட்பட அனைத்து ஒடுக்கு முறைகளையும் அது தூக்கிப் பிடித்து அதன் புராதன ஒடுக்கு முறையான பாலின ஒடுக்கு முறையை யும் பிரிட்டிஸ் காலனியாதிக்கம் தூக்கிப்பிடித்தது.

இந்தக் காலக்கட்டத்தில் பிரிட்டிஸ் காலனியாதிக்கம் கொள்ளையினால் பெண்களின் மீதான ஆணாதிக்கக் கொடுமைகள் தீவிரப்படுத்தப்பட்டன. பெண்களும் சிறுமிகளும் கணவனின் எரியும் சிதைக்குள் தள்ளப்பட்டனர். பல திருமணமாகாதப் பெண்கள் விபாச்சார விடுதிக்குள் விற்கப்பட்டனர். இந்தியப் பொருளாதாரச் சீரழிவினால் ஏற்பட்ட பசியின் கோரப்பிடிக்குள் சிக்குண்ட இந்திய மக்கள் கன்னிப் பெண்களை வியாபாரம் செய்வது மிகவும் சுறுசுறுப்பாக நடந்தது. பெண்கள் வயதுவந்தவுடன் அவர்களது கைகளில் முத்திரைக் குத்தி நிலப்பிரபுக்களுக்கு விற்கப்பட்டனர். கர்நாடகத்தில் இன்றும் இக்கொடுரம் தொடர்கிறது. தனி சொத்துக்களாக இருந்த நிலங்களனைத்தும் காலனியாதிக் கவாதிகளால் ஆண்களின் பெயரில் பதிவு செய்யப்பட்டன.

காலனிய முலதனத்திற்கு தொழிலாளிகளைத் தேடும் நிலை உருவானதால், இந்திய தோட்டத் தொழிலும். சுரங்கத் தொழிலும் பெண் தொழிலாளி வர்க்கம் தோன்றியது. பஞ்சத்தினால் வறுமையில் உழன்றுக் கொண்டிருந்த விவசாயி



படிப்பகம்

www.padippakam.com

களின் இத்தொழிலாளி வர்க்கம் உருவானது. பெண் தொழிலாளர்களுக்கு ஆண்களின் கூலியில் 1/4 பங்குக்கும் குறைவாகவே கூலி கொடுத்தனர். இவர்கள் பாலியல்ஒடுக்கு முறைக்கும் ஆளாயினர்.

காலனியாதிக்கம் இந்தியப் பொருளாதாரத்திற்கு உண்டாக்கிய நெருக்கடிகள் பெண்களுக்கு ஓர் புதிய சுமையைக் கொடுத்தது. காலனியாதிக்கத்திற்கு முந்தைய காலத்திலிருந்த கூலியும், சத்துணவும் குறைவாக்கப்பட்டதால் பெண்களின் வாழ்க்கை நரகமாக்கப்பட்டது.

இன்றைய அரை நிலபிரபுத்துவ அரை காலனிய சமூகத்தில் பெண்ணின் நிலையும், பெண்விடுதலை அடைய உள்ள வழிகளைப் பற்றி அடுத்த இதழில் பார்ப்போம்!

(தொடரும்)

(நண்பர்களே! இக்கட்டுரையில் ஏதாவது சந்தேகங்கள்) அல்லது, விளக்கங்கள் தேவைப்படின் கடிதம் மூலம் தெரிவியுங்கள்! இதனால் தேவைப்படும் விளக்கங்களையும், விவாதங்களையும் அடுத்தஇதழில் பிரசுரிக்கலாம்.)

## ராமராஜ்யம்...?

வில்லொடித்தான்
மகிழ்ந்தேன்.
அன்று
தெரியாது
மனதையும் ஒடிப்பானென்று
வனம் அழைக்க
அவனைத்
தொடர்ந்தேன்
வருவதை
உணராமல்..
சிறைபிடிக்க
சிறகொடிந்தேன்
ஆனாலும்
உளம் தளரவில்லை.
இன்று
சிறகைவிரிக்கையில்
தீக்குளித்தேன்
அவனது
வார்த்தைகளில்
மனம்ஒடிந்தது
இது தான்
ராமராஜ்ஜியமா
என்று!

– ஆனந்தி

**அன்பார்ந்த வாசகர்களே!**

**சில தவிர்க்க முடியாத காரணத்தினால் மே – ஜூன் '99, ஜூலை – ஆகஸ்ட் '99 என்னும் இரு இதழ்களை, ஒரே இதழாக வெளியிடுகிறோம் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.**

**– ஆசிரியர் குழு**



படிப்பகம்

www.padippakam.com

# வீட்டு வேலைசெய்யும் பெண்களிடம் நேர்காணல்

சமிபத்தில் வீட்டு வேலை செய்யும் பெண்களின் அவலங்களைப் பற்றி இந்தப் பத்திரிக்கையில் எழுதலாம் என்று முடிவெடுத்து மூன்று பேர் கொண்ட "உண்மை அறியும் குழு" வீட்டு வேலை செய்யும் ஐந்து பெண்களையும் மற்றும் வீட்டு வேலை செய்பவர்களுக்கான சங்கத்தையும் பேட்டிக்கண்டோம்.அந்தப் பேட்டியின் சாராம்சத்தை இனிப்பார்ப்போம்.

முதலாவதாக வீட்டுவேலை செய்யும் பெண்களுடன் பேசியதன் சுருக்கத்தைக் காண்போம்.

**திரு மதி செல்வி :-**

35 வயதான திரு மதி செல்வியின் கணவர் இரும்புவேலை செய்து வாரம் –ரூ 600/- சம்பாதித்தாலும் சில வாரங்களில் சம்பளமே இல்லாமலும் போகலாம். செல்வி கடந்த 4 வருடங்களாக 2,3 வீடுகளில் வேலை செய்து வருகிறார். ஒவ்வொரு வீட்டிலும் சுமார் 2 மணி நேரம் வேலை. டீ மட்டும் குடித்துவிட்டு காலை 10.30 மணிக்குக் கிளம்பினால் மதியம் 1.30 மணிக்கு வீடு திரும்பிய பின்தான் சாப்பாடு. காலையில் தம் வீட்டில் சமையல் மட்டும் செய்துவிடுவார், மற்ற வேலைகளை பிள்ளைகள் செய்கிறார்கள். வக்கில் மற்றும் புடவை வியாபாரம் செய்யும் எஜமான்கள் வீட்டில் பாத்திரம் தேய்த்து, துணி துவைத்து (துணி துவைக்கும் இயந்திரம் இருந்தாலும், கையால் தேய்த்தால் தான் அழுக்குப்போகும் என்பதற்காக இயந்திரத்தைப் பயன்படுத்துவதில்லை) வீட்டைப் பெருக்கி, துடைத்து, கடைக்கும் போய் வருகிறார். செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் பூஜைப் பாத்திரங்களை தேய்க்க வேண்டும். உடல்நிலை சரியில்லாத போதும் எல்லா வேலைகளையும் செய்ய வேண்டும். விடுமுறை கிடைப்பதில்லை. வேலை செய்யும் போது கை அடிப்பட்டபோது தன்னுடைய பணத்திலிருந்து ரூ 100./ எடுத்து செலவழித்தார். மேலும் அச்சமயத்தில் வேலைக்குப்போக முடியாததால் தன் பிள்ளைகளை அனுப்பிவைத்தார்.

தனக்கு தரப்படும் சம்பளம் ஒருவீட்டிற்கு ரூ. 200, ரூ.250 தான் கொடுக்கிறார்கள் என்றார். அவசரத்திற்கு கடனாக ரூ.50, 100 கொடுத்தால் சம்பளத்தில் பிடித்துக் கொள்வார்கள். தீபாவளி, பொங்கலுக்கு பழைய சேலையுடன் ரூ.10, கொடுத்திருக்கிறார்கள். விலைவாசிக்கு ஏற்றதாய் சம்பளம் இல்லை என்று கூறினார். தனக்கு கம்பெனி வேலை சரிபட்டு வராது என்றும் வீட்டையும்,தன் பிள்ளைகளையும் கவனிக்க முடியாது என்றும் கூறினார். தன் வீட்டு வாடகையுடன் கரண்டும் சேர்த்து ரூ 800, கொடுக்கிறார். தான்வாங்கிய சம்பளமும், கணவரின் சம்பளமும் போதாத காரணத்தால் பற்றாக் குறைக்கு தண்டல் வாங்குகிறார். ரூ.100, க்குவட்டிப் பிடித்துக் கொண்டு ரூ. 95 தருவான். வாரவட்டி 12.5, யை செல்வி தன் சம்பளத்திலிருந்து தான் கடன் அடைக்கிறார்.



படிப்பகம்

www.padippakam.com

மாலையில் வேலைக்குப் போவதுபற்றி கேட்டதற்கு இவர்கள் தரும் சம்பளத்திற்கு காலை செய்வதே போதும் என்கிறார். தனி ஆண்கள் உள்ள வீட்டில் நாங்கள் ஏன் வேலைக்கு போகிறோம் என்று கேட்கிறார். வீட்டு வேலை செய்பவர்களுக்கான சங்கங்களைப் பற்றி இவர் கேள்விப்பட்டதேயில்லை, அப்படி இருந்தால் நல்லது என்று சொல்கிறார். எல்லோரும் ஒன்று சேர்ந்தால் இந்த நிலையை மாற்றலாம் என்ற நம்பிக்கை இவருக்கு உள்ளது.

**திருமதி லட்சுமி:-**

மூன்று வீடுகளில் வேலை செய்யும் லட்சுமிக்கு 24 வயது ஆகிறது. இரண்டு சிறு பிள்ளைகள். மூன்று வீடுகள் வீதம் ரூ100, 150, 200, கொடுத்தால் சம்பளத்தில் பிடிப்பு. கணவருக்கு கூலி வேலை ரூ .20, முதல் ரூ. 100, வரும்2 வருடங்களாக வீட்டு வேலை செய்து வரும் இவர் தம் வீட்டு வேலைகளையும் தாமே தனியாக செய்கிறார். வீட்டு வேலை செய்பவர்களுக்கு மதிப்பேயில்லை என்று கூறும் லட்சுமி, சங்கம் இருப்பது நல்லது என்று கூறுகிறார். முன்பு தண்டல் எடுத்துக் கொண்டு இருந்தாலும் இப்போது இல்லை. விலைவாசிக்கு ஏற்ற சம்பளம் இல்லை என்றுக் கூறுகிறார். இவருக்கு சில சமயங்களில் 2 மாதங்கள் சம்பளம் தராமல் சேர்த்து தருவார்களாம். எஜமானர் களுக்கு பணக்கஷ்டம் வந்தால் அப்போது வேறு வீட்டில் கடன் வாங்கி சமாளிக்கிறார். தம் பிரச்சினைகளுக்கான தீர்வைப்பற்றி யோசித்ததேயில்லை என்கிறார் லட்சுமி.

**திருமதி ருக்மணி :-**

ஒரு வருடமாக வீட்டு வேலை செய்து வரும் ருக்மணிக்கு வயது 28 ஆகிறது ஒரு வீட்டிற்கு சம்பளம் 300, ஒரு வீட்டில் டிபன் தருகிறார்கள். மாலையில் வேலை செய்வதில்லை. வேலையின் போது அடிபட்டால் (மறுநாள் லீவுபோட்டு விடுவார் என்ற பயத்தால்) கொஞ்சம் காசு கொடுப்பார்கள். இவரின் இரண்டு பிள்ளைகளும் படிக்கிறார்கள். வருமானம் இவருக்கும் போதவில்லை. கணவரின் சம்பளத்தோடு சுமாராக குடும்பம் நடத்த முடிகிறது என்கிறார். இந்த நிலையை மாற்றுவது பற்றி கேட்டதற்கு, இந்த உடம்பு இருக்கிற வரை வேலை "பிறகு ஆண்டவன் விட்ட வழி" என்கிறார்.

**நாராயணி:-**

சுமார் 51 வயது ஆகும் நாராயணியிடம் கேட்டதற்கு, ஒரு வீட்டில் குழந்தைகளைப் பார்த்துக் கொண்டு டிபன் செய்வது, சமையலறை, மேஜை துடைப்பது போன்ற வேலைகள் செய்கிறார். காலை 7,00 மணி முதல் மாலை 7,00 மணி வரை செய்யும் இவர் வேலைக்கு ரூ. 600/- சம்பளம். காலையில் சாப்பிடுவதேயில்லை, மதியம் அங்கேயே சமைத்து சாப்பிடுகிறார். தீபாவளிக்கு சேலை ரூ.200/- பாத்திரங்கள் தருகிறர்ாகள், இரண்டு முறை ரூ. 1000/- கடன் கொடுத்து சம்பளத்தில் பிடித்திருக்கிறார்கள். இவர் சுத்தமாக இருப்பதால் குழந்தைகளுக்கு "நோய் நொடியில்லை" என்பதாலேயே இவரை வேலைக்கு வைத்திருக்கிறார்கள் என்கிறார். தம் வேலைக்கு ரூ.1000/- சம்பளம் கொடுக்க வேண்டும் என்கிறார். பலர் ஒன்றாக சேர்ந்தால் இந்த நிலையை மாற்றலாம்



படிப்பகம்

www.padippakam.com

என்று நம்புகிறார். எல்லாரும் சேர்ந்து இந்த நிலைமைமாற்றினால் அடுத்த வம்சமாவது நல்லா இருக்கும் என்கிறார் இவர்.

**திருமதி அலமேலு**

ஒருவருடமாக ஒரு வீட்டில் வேலை செய்யும் அலமேலுவுக்கு வயது 33 ஆகிறது. ரூ 500/- சம்பளம் வாங்கும் இவர் அது வாடகைக்கே போதாது என்கிறார். காலையில் 10.00 மணி முதல் 12.00 மணி வரை வேலை செய்கிறார். மாலையில் ஒரு மணிநேர வேலை. பண்டிகைக்கு புடவை, பணம் தருவதோடு அவசரத்திற்கு ரூ 100/- 200/- தருகிறார்கள். துணி உலர்த்துவது, காய்கறி அரிவது, பெருக்குவது, டீ போடுவது போன்ற சிறு வேலை களோடு, அவ்வப்போது ஊனமுற்ற ஒரு சிறுமியையும் பார்த்துக் கொள்வதே இவரது வேலை. லீவு எடுக்க விடுகிறார்கள். எஜமானர்கள் வீட்டில் உறவினர்கள் வந்திருந்தால் கூடுதலாக பணம் தருகிறார்கள். விலைவாசிக்கு ஏற்றவாறு சம்பளமும், கணவனின் வருமானமும் இல்லாததால் சமயத்தில் தண்டல் எடுக்கிறார்.

1. வீட்டில் ஒய்வாக இருப்பதற்கு பதில் ஏதாவதொரு வேலை செய்யலாம் என்றே வேலைக்குப் போகிறார்கள். இவர்கள் உள்ள இடத்தில் சங்கம் இல்லையென்றாலும், தேவையென்றே நினைக்கிறார்கள். எதிர்காலத்தில் மாற்றம் என்பது பற்றி யோசிப்பதில்லை இவர்கள் எல்லோருமே கஷ்டப்பட்டாவது தம் பிள்ளைகளை படிக்க வைக்கின்றனர், ஆனால் இவர்கள் கஷ்டப்பட்டு குடும்பத்தை நடத்தி வருகின்றனர்.

2. குறைந்த சம்பளத்திற்கு வேலை செய்யும் இவர்கள், விலைவாசிக்கு ஏற்றதாக சம்பளம் இல்லை என்றே கருதுகின்றனர். பொதுவாக இவர்களின் உழைப்பிற்கு மதிப்பே யில்லை என்கிறார்கள்.

கடைசியாக (EA/WS ) பெண்களின் படிப்பு மற்றும் வளர்ச்சி மையம்) சங்கத்தின் டைரக்டர், வழக்கறிஞர் மிருநளினியை சந்தித்தோம். இவர் வீட்டு வேலை செய்யும் பெண்களைப்பற்றி குறிப்பிடுகையில் .

முழுநேர வீட்டுப் பணியாளர்கள், மற்றும் பகுதிநேர வீட்டுபணியாளர்கள் என இருபிரிவினர் உள்ளனர். முழு நேர வீட்டுப் பணியாளர்கள் அந்த வீட்டிலேயே தங்கி இருக்க வேண்டும். இவர்களுக்கு சோப்பு, எண்ணெய் மட்டுமே தந்து, மாதச் சம்பளமாக ரூ 1000./ 1500./ தான் தருகிறார்கள். பன்னி ரெண்டாம் வகுப்பு படித்த பெண்கள் கூட வேலையில்லாப் பற்றாக்குறைக்கு இது போன்ற வேலைகளுக்குச் செல்கின்றனர் என்று குறிப்பிடுகிறார்.

பகுதி நேர வீட்டுப் பணியாளர்கள் மூன்று, நான்கு வீடுகளில் பாத்திரம் துலக்குவது, வீடு பெருக்குவது வீட்டைத்துடைப்பது, துணிதுவைப்பது போன்ற வேலைகளைச் செய்தாலும் அவர்களின் சம்பளமோ மாதம் 400/- (மூன்று, நான்கு வீடுகளைச் சேர்த்து) தான் வாங்குகின்றனர். இவர்களுக்கு முதலாளியின் கருணையால் கிடைப்பதோ காபி, மீந்துப்போன உணவுப் பொருட்கள் தான். இவர்களின் வருமானம் அன்றாட வாழ்க்கை நடத்தவே கடினமாக இருக்கும் கட்டத்தில், பற்றாக்குறைக்கு தனி நபர்களிடம் வட்டிக்கு கடன்படுகின்றனர்.



படிப்பகம்

www.padippakam.com

இதனால் தண்டல்காரர்களின் தொல்லைக்கும், இன்னல் களுக்கும் ஆளாகின்றனர். சில சமயங்களில் தங்களுடைய எஜமானர் களிடையே கடன்வாங்கி, மாத வருமானத்தில் பிடித்துக் கொள்ளச் செய்வதால் கொத்தடிமையைப்போல் வாழ்கின்றனர் என்று கூறுகிறார்.

மேலும் பலமாடிக் கட்டிடங்களில் வசிப்பவர்களுக்கு தண்ணீர்வசதி இல்லாத காரணத்தால், தண்ணீர் எடுத்துக் கொண்டு மேலே உள்ள இரண்டு, மூன்று மாடிக்கு கீழிருந்து சுமந்து செல்வதால், பெண்களுக்கு கர்ப்பப்பை கீழிறங்குவது போன்ற கர்ப்பப்பை சம்பந்தமானஇடையூருகள் ஏற்படு கின்றன

இரண்டு, மூன்று விடுகளில் ஓயாமல் வேலை செய்வதால் தலைவலி, முதுகுவலி, மற்றும் துணி துவைக்கும் சோப்பு ஒத்துக் கொள்ளாததால் தோல் சம்பந்தப்பட்ட நோய்களுக்கும் இப்பெண்கள் ஆளாகின்றனர் என்றார். இது மட்டுமல்லாமல் துபாய், சிங்கப்பூர் போன்ற வெளிநாடுகளுக்கு வீட்டுவேலை செய்யப் பெண்களை நேரடிக்காணல் முலம் பொருளாதாரத் தேவைக் காக ஒன்றுமறியாத பெண்களை அனுப்பி விடுகின்றனர் என்றும், அங்கு சில பெண்கள் விபச்சாரத்திற்கு ஈடுபடுத்துவது போல் கூட செவிப்பட செய்திகள் வருவதாகவும் மிகவும் வருத்தத்துடன் தெரிவித்தார்.

வீட்டு வேலை செய்யும் பெண்களின் உழைப்பு மதிக்கப் படாததாலும், சமூக உற்பத்தியில் நேரடியாக ஈடுபடாததாலும். தொழிலாளர் சட்டமும், இப்பெண்களை ஒரு தொழிலாளியாகக் கருதவில்லை. வேலை நேரத்தில் அடிப்பட்டாலும் நஷ்ட ஈடு கொடுக்கபடுவதே இல்லை என்று மிக வருத்தத்துடன் கூறினார். இச்சங்கம் வீட்டுவேலை செய்வருக்கு எல்.ஐ.சியில் இன்சூரன்ஸ் வாங்கி கொடுப்பது, மருத்துவ முகாம்கள் நடத்தவும், மாலை நேர வகுப்புகள் எடுப்பது, மனு கொடுப்பது, ஆர்ப்பாட்டம் செய்வது, அரசாங்கம் அறிவிக்கும் திட்டத்தை புணரமைப்பு செய்வது போன்ற வேலைகளைச் செய்து வருகின்றனர் என்றும் கூறினார்.

இந்தியாவில் மட்டுமல்லாமல் புனேயில் 1985 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின் படி 3,00,000 பெண்களும் 4,00,000 பெண்களும் பிரேசிலில் 1000 பெண்களும் வீட்டுவேலை செய்வதில் அதிக எண்ணிக்கை உடையவர்களாகவே உள்ளனர்.

இந்தப் பேட்டியிலிருந்து ஒன்று தெளிவாகப் புரிகின்றது, மில்லியன் முறை துணி துவைத்தல் என்ற வேலைகளையே குறைந்தக் கூலிக்கு வேலை செய்யும் இந்தப்பெண்களின் உழைப்பை சட்டம் பொருட்டாக கருதவில்லை. இந்த சமூக அமைப்பும் மதிக்கவில்லை. கடன்பட்டு கொத்தடிமைகளாக வேலை செய்யும் இவர்களின் பிரச்சினைகளை லோன்கொடுப்பது அரசாங்க உதவிகளை பயிற்றுவிக்கும் மூலம் தீர்க்க முடியாது, இவர்களின் உழைப்பும், சமூக உழைப்பாலும் சமத்துவம் கிட்டாமல் இவர்கள் பிரச்சினைகள் தீராது. இந்த சமத்துவத்திற்காக சமூக மாற்றத்திற்காக போராடும் சங்கங்களை அமைக்கும்போது நாராயணி அம்மாக்கூறியது போல் "இந்நிலையை மாற்றனும் நாமெல்லாம் ஒன்று சேரனும், அப்பத்தான் நம்ம புள்ளைங்களும் இந்த கஷ்டத்தில் இல்லாமல் நல்லா இருக்கும்"

- அனாமிகா



படிப்பகம்

www.padippakam.com

# சாப விமோசனம்

- புதுமைப்பித்தன்

(ராமாயண பரிசயமுள்ளவர்களுக்கு இந்தக் கதை பிடிபடாமல் பிடிக்காமல் கூட இருக்கலாம். அதை நான் பொருட்படுத்த வில்லை)

சாலையிலே ஒரு கற்சிலை. தளர்ந்து நொடிந்து போன தசைக் கூட்டத்திலும், வீரியத்தைத்துள்ள வைக்கும் மோகன வடிவம்... ஓர் அபூர்வ சிற்பி பூலோகத்தில் இதற்காக வென்றே பிறந்து தன் கனவையெல்லாம் கல்லில் வடித்து வைத்தானோ என்று தோன்றும் அவ்வளவு லாகிரியை ஊட்டுவது. ஆனால் அந்தப் பதுமையின் கண்களிலே ஒரு சோகம். சொல்லில் அடைபடாத - சோகம் பிறந்து, பார்க்கிறவர்களின் வெறும் தசை ஆசையான காமத்தைக் கொன்று அவர்களையும் சோகத்தில் ஆழ்த்தியது. அது சிற்பியின் அபூர்வக் கனவு அன்று. சாபத்தின் விளைவு. அவள்தான் அகலிகை.

'அந்தக் காட்டுப் பாதையில் கல்லில் அடித்து வைத்து சோகமாக, அவளது சோகத்தைப் பேதமற்ற கண்கொண்டு பார்க்கும் துறவி போன்ற இயற்கையின் மடியிலே கிடக்கிறாள். சூரியன் காய்கிறது. பனி பெய்கிறது. மழை கொழிக்கிறது. தூசும் தும்பும் குருவியும் கோட்டானும் குந்துகின்றன... பறக்கின்றன. தன் நினைவற்ற தபஸ்வியாக – கல்லாக– கிடக்கிறாள்.

சற்றுத் தூரத்திலே ஒரு கறையான் புற்று. நிஷ்டையில் ஆழ்ந்து தன் நினைவகற்றித் தன் சோகத்தை மறந்து தவம் கிடக்கிறான் கோதமன். இயற்கை, அவனையும் அபேதமாகத்தான் போஷிக்கிறது. இன்றும் சற்றுத் தூரத்திலே இந்தத் தம்பதி களின்குடும்பக் கூடு கம்பமற்று விழ்ந்ததுபோல. இவர்களுக்கு நிழல் கொடுத்த கூரையும் தம்பம் இற்று வீழ்ந்து பொடியாகிக் காற்றோடு கலந்துவிட்டது.

சுவரும் கரைந்தது. மிஞ்சியது திரடுதான். மனசில் ஏறிய துன்பத்தின் வடுப்போலத் தென்பட்டது அது.

தூரத்திலே கங்கையின் சலசலப்பு. அன்னை கங்கை, இவர்களது எல்லையற்ற சோகத்தை அறிவாளோ என்னவோ! இப்படியாக ஊழி பலகடந்தன. தம்பதிகளுக்கு.

ஒரு நாள் ....

முற்பகல் சூரிய ஒளி சற்றுக் கடுமைதான். என்றாலும் கொடிகளின் பசுமையும் நிழலும், இழைந்து வரும் காற்றும், உலகின் துன்பத்தை மறைக்க முயன்று நம்பிக்கையையும் வலுவையும் தரும் சமய தத்துவம்போல, இழைந்து மனசில் நடைநடந்து, எடுத்த கருமம் முற்றியதால் உண்ட மகிழ்ச்சியை மனசில் 'அசைபோட்டு'க் கொண்டு, நடந்து வருகிறான் விசுவாமித்திரன். மாரீசனும் சுவாகுவும் போன இடம் தெரிய வில்லை. தாடகை என்ற கிழட்டுக் கொடுமை நசித்துவிட்டது. நிஷ்டையில் ஆழ்ந்தும், எரியோம்பியும் தர்ம விசாரத்தில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு நிம்மதியைத் தரும் சாதனமாகத் தன்னை



படிப்பகம்

www.padippakam.com

ஆக்கிக்கொண்ட ஒரு திருப்தி.

அடிக்கடி திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொள்கிறான். பார்வையில் என்ன பரிவு! இரண்டு குழந்தைகள் ஓடிப்பிடித்து விளையாடி வருகின்றன. அவர்கள் வேறு யாருமல்ல....அவதார சிசுக்களான ராமலக்ஷ்மணர்களே. அரக்கர் நசிவை ஆரம்பித்து வைத்துவிட்டு அதன் பொறுப்புத் தெரியாமல் ஓடிப் பிடித்து வருகிறார்கள்.

ஓட்டம் புழுதியைக் கிளப்புகிறது. முன்னால் ஓடி வருகிறான் லக்ஷ்மணன்... துரத்தி வருபவன் ராமன். புழுதிப் படலம் சிலையின் மீது படிகிறது ...

என்ன உத்சாகமோ என்று உள்ளக் குதூகலிப்புடன் திரும்பிப் பார்க்கிறார் விசுவாமித்திரர். பார்த்தபடியே நற்கிறார்.

புழுதிப் படலம் சிலையின் மீது படிகிறது.

எப்போதோ ஒரு நாள் நின்று கல்லான இதயம் சிலையுள் துடிக்கிறது. ஓடிப்போன இடத்தில் நின்று இறுகிப்போன ரத்தம் ஓட ஆரம்பிக்கிறது. கல்லில் ஜீவ உஷ்ணம் பரவி உயிருள்ள தசைக் கோளமாகிறது. பிரக்ஞை வருகிறது.

கண்களை முடித்திறக்கிறாள் அகலிகை. பிரக்ஞை தெளிகிறது. சாப விமோசனம்! சாப விமோசனம்!

தெய்வமே! மாசுபட்ட இந்தத் தசைக்கூட்டம் பவித்திரம் அடைந்தது!

தனக்கு மறுபடியும் புதிய வாழ்வைக் கொடுக்க வந்த தெய்வீக புருஷன்! அந்தக் குழந்தையா-

அவன் காலில் விழுந்து நமஸ்கரிக்கிறாள். ராமன் ஆச்சர்யத்தால் ரிஷியைப் பார்க்கிறான்.

விசுவாமித்திரருக்குப் புரிந்துவிட்டது. இவள் அகலிகை. அன்று இந்திரனுடைய மாய வேஷத்துக்கு ஏமாறிய பேதை. கணவன் மீதிருந்த அளவுக்குள் அடங்காத பாசத்தின் விளைவாக, தன் உடம்பை, மாய வேஷத்தால் ஏமாறி, மாசுபடுத்திக் கொண்டவள்.... கோதமனின் மனைவி. அவ்வளவையும் ராமனிடம் சொல்லுகிறார். அதோ நிற்கும் புற்று இருக்கிறதே... அதில், வலை முட்டையில் மோனத்தவங்கிடக்கும் பட்டுப் பூச்சிப்போலத் தன்னை மறந்து நிஷ்டையில் ஆழ்ந்து இருக்கிறான். அதோ அவனே எழுந்துவிட்டானே!

நிஷ்டை துறந்த கண்கள் சாணை தீட்டிய கத்திபோல சுருள்கின்றன. உடலிலே, காயகற்பம் செய்ததுபோல வலு பின்னிப்பாய்கிறது. மிடுக்காக, பெண்ணின் கேவலத்திலிருந்து விடுவித்துக் கொள்ள முடியாதவனைப்போலத் தயங்கி வருகிறான்.

மறுபிடியும் இந்தத் துன்ப வலையா? சாப விமோசனத்துக்குப் பிறகு வாழ்வு எப்படி என்பதை மனசு அப்பொழுது நினைக்க வில்லை. இப்பொழுதோ அது பிரம்மாண்டமான மதிளாக அவனது வாழ்வைச் சுற்றியே மண்டலிக்கிறது. அவன் மனம் மிரளுகிறது.

ராமனுடைய கல்வி, தர்மக் கண்கொண்டு பார்த்தது. தெளிவின் ஒளி பூண்டது ஆனால் அறுபவச் சாணையில் பட்டை பிடிக்காது... வாழ்வின் சிக்கலின் ஒவ்வொரு நூலையும் பின்னலோடு பின்னல் ஒடியாமல் பார்த்த வசிஷ்டனுடைய



படிப்பகம்

www.padippakam.com

போதனை. ஆனால்சிறுமையைஅறியாதது. புது வழியில் துணிந்து போக அறிவுக்குத் தெம்பு கொடுப்பது.

உலகத்தின் தன்மை என்ன, இப்படி விபரீதமாக முறுக்கேறி உறுத்துகிறது! மனசுக்கும் கரணசக்தியின் நிதானத்துக்கும் கட்டுப் படாமல் நிகழ்ந்த ஒரு காரியத்துக்கா பாத்திரத்தின் மீது தண்டனை? "அம்மா!" என்று சொல்லி அவள் காலில் விழுந்து வணங்கு கிறான் ராமன்.

இரண்டு ரிஷிகளும், (ஒருவன் துணிச்சலையே அறிவாகக் கொண்டவன்... மற்றவன் பாசத்தையே தர்மத்தின் அடித்தல மாகக் கொண்டவன்) சிறுவனுடைய நினைவுக்கோணத்தில் எழுந்த கருத்துக்களைக் கண்டு குதூகலிக்கிறார்கள். எவ்வளவு லேசான, அன்பு மயமான, துணிச்சலான உண்மை.

'நெஞ்சினால் பிழை செய்யதவளை நீ ஏற்றுக் கொளுவதுதான் பொருந்தும்" என்றான் விசுவாமித்திரன் மெதுவாக.

குளுமை பூண்ட காற்றில்அவனது வாதக் கரகரப்பு ரஸபேதம் காட்டுகிறது.

கோதமனும், அவன் பத்தினியும் அந்தத் தம்ப மற்றுத் திரடேறிப் போன மேடும்அவ்விடத்தை விட்டு அகலவில்லை. முன்பு உயிரற்றிருந்த இடத்தில் ஜீவகளை துவள நினைத்தது.

சாட்டையின் கொடுக்கைப்போலப்போக்கை மாற்றியமைக்க வந்த சக்திகள் அவ்விடம் விட்டுப் பெயர்ந்துவிட்டன. மிதிலைக்குப் பொழுது சாயும் பொழுதாவதுபோக வேண்டாமா? மணவினை, இருகைகளை நீட்டி அழைக்கிறதே.

கோதமனுக்கு அவளிடம் முன்போல் மனக் களங்கமின்றிப் பேச நாவெழவில்லை. அவளை அன்று விலைமகள் என்று சுட்டது, தன் நாக்கையே பொசுக்க வைத்து விட்டது போல இருக்கிறது. என்ன பேசுவது? என்ன பேசுவது? என்னபேசுவது?

"என்ன வேண்டும்?" என்றான்கோதமன். அறிவுத் திறம் எல்லாம் அந்த உணர்ச்சிச் சுழிப்பிலே அகன்று பொருளற்ற வார்த்தையை உந்தித் தள்ளியது.

'பசிக்கிறது" என்றாள் அகலிகை, குழந்தைபோல்.

அருகிலிருந்த பழனத்தில் சென்று கனிவர்க்கங்களைச் சேகரித்து வந்தான் கோதமன். அன்று , முதல் முதல் மணவினை நிகழ்ந்த புதிதில் அவனுடைய செயல்களில் துவண்ட ஆசையும் பரிவும் விரல்களின் இயக்கத்தில் தேக்கத்தில் காட்டின.

'அந்த மணவினை உள்ளப்பரிவு பிறந்த பின்னர் பூத்திருந்தாலும், ஏமாற்றின் அடிப்படையில் பிறந்ததுதானே. பசுவை வலம் வந்து பறித்து வந்ததுதானே!' என்று கோதமனுடைய மனசு, திசை மாறித் தாவித் தன்னையே சுட்டுக் கொண்டது.

அகலிகை பசி தீர்ந்தாள்.



படிப்பகம்

www.padippakam.com

அவர்கள் மனசில் பூர்ணமான கனிவு இருந்தது. ஆனால் இருவரும் இருவிதமான மனக்கோட்டைகளுக்குள் இருந்து தவித் தார்கள்.

கோதமனுக்குத் தான் ஏற்றவளா என்பேத அகலிகையின் கவலை. அகிலிகைக்குத்தான்ஏற்றவனா கோதமனின் கவலை சாலை யோரத்தில் பூத்திருந்த மலர்கள் அவர்களைப் பார்த்துச் சிரித்தன.

அகலிகையின் விருப்பப்படி, ஆசைப்படி அயோத்தி வெளி மதில்களுக்குச் சற்று ஒதுங்கி,மனுஷ பரம்பரையின் நெடிபடாத தூரத்தில்,சரயூநதிக்கரையிலே ஒரு குடிசை கட்டிக்கொண்டு தர்ம விசாரம் செய்து கொண்டிருந்தான் கோதமன். இப்பொழுது கோதமனுக்கு அகலிகைமீது பரிபூரண நம்பிக்கை. இந்திரன் மடிமீது அவள் கிடந்தால் கூட அவன் சந்தேகிக்க மாட்டான். அவ்வளவு பரிசுத்த வதியாக நம்பினான் அவன். அவளது சிற்றுதவி இல்லாவிடின் தனது தர்மவிசாரம் தவிடு பொடியாகிவிடும் என்ற நிலை அவனுக்கு ஏற்பட்டது.

அகலிகை அவனை உள்ளத்தினால் அளக்க முடியாத ஓர் அன்பால் தழைக்க வைத்தாள். அவனை நினைத்து விட்டால்,அவள் மனமும் அங்கங்களும் புது மணப் பெண்ணுடையனபோலக் கனிந்துவிடும். ஆனால்,அவள் மனசில் ஏறிய கல் அகலவில்லை. தன்னைப் பிறர் சந்தேகிக் காதபடி, விசேஷமாகக் கூர்ந்து பார்க்கக் கூட, இடங் கொடாதபடி நடக்க விரும்பினாள். ஆனால் அவள் நடையில் இயற்கையின் தன்மை மறந்து இயல்பு மாறியது. தன்னைச் சூழ நிற்பவர்கள் யாருமே இந்திரர்களாகத் தென் பட்டார்கள். அகலிகைக்குப் பயம் நெஞ்சில் உறையேறிவிட்டது. அந்தக் காலத்திலிருந்த பேச்சும் விளையாட்டும் குடியோடிப்போயின. ஆயிரம்தடவை மனசுக்குள் திருப்பித் திருப்பிச் சொல்லிப் பாடம் பண்ணிக் கொண்டு, அந்த வார்த்தை சரிதானா என்பதை நாலு கோணத்திலிருந்தும் ஆராய்ந்து பார்த்துவிட்டுத்தான் எதையும் சொல்லுவாள். கோதமன் சாதாரணமாகச் சொல்லும் வார்த் தைகளுக்குக்கூட உள்ளர்த்தம் உண்டோ என்று பதைப்பாள்.

வாழ்வே அவளுக்கு நரக வேதனையாயிற்று.

அன்று மரிசிவந்தார். முன்னொரு நாள் ததிசி வந்தார். மதங்களும்வாரணுசி செல்லும்போது கோதமனைக் குசலம் விசாரிக்க எட்டிப்பார்த்தார். அவர்கள் மனசில் கனிவும் பரிவும் இருந்தபோதிலும், அகலிகையின் உடம்பு குன்றிக்கிடந்தது. மனசும் கூம்பிக் கிடந்தது. அதிதி உபசாரங்கூட வழுவி விடும்போல இருந்தது. ஏறிட்டுச் சாதாரணமாகப் பார்க்கிறவர்களையும் களங்க மற்ற கண்கொண்டு பார்க்கக் கூசியது. குடிசையில் ஒளிந்து கொண்டாள்.

கோதமனுடைய சித்தாந்தமே இப்பொழுது புது வித விசாரனையில் திரும்பியது. தர்மத்தின் வேலைகள் யாவும் மனமறிந்து செய்பவர்களுக்கே. சுயப் பரக்ஞை இல்லாமல் வழு ஏற்பட்டு, அதனால் மனுஷ வித்து முழுவதுமே நசிந்துவிடும் என்றாலும், அது பாபம் அல்ல. மனலயிப்பும், லயப்பிரக்ஞைய டன் கூடிய செயலீடு பாடுமே கறை படுத்துபவை. தனது இடிந்து போன குடிசையில் மறுபடியும் பிறர் கூட்டி வைத்த ஒரு தன்மையில் இருந்து கொண்டு புதிய கோணத்தில் தன் சிந்தனையைத் திருப்பி விட்டான் கோதமன். அவனுடைய மனசில் அகலிகை மாசு அற்றவளாகவே உலாவினாள். தனக்கே



படிப்பகம்

www.padippakam.com

அரு கதை இல்லை. சாபத் தீயை எழுப்பிய கோபமே தன்னை மாசு படுத்திவிட்டது என்று கரு தினான்.

சீதையும் ராமனும் உல்லாசமாகச் சமயா சமயங்களில் அந்தத் திசையில் ரதமூர்ந்து வருவார்கள். அவதாரக் குழந்தை, கோத மனின் மனசில் லக்ஷ்ய வாலிபனாக உருவாகித் தோன்றினான். அவனது சிரிப்பும் விளையாட்டுமே தர்மசாஸ்திரத்தின் தூண்டா விளக்குகளாகச் சாயனம் (வியாக்கியானம்) பண்ணின. அந்த இளம் தம்பதிகளின் பந்தந்தான் என்ன? அது கோத மனுக்குத் தனது அந்தக் காலத்து வாழ்வை ஞாபகப்படுத்தும்.

அகலிகையின் மனப் பாரத்தை நீக்க வந்த மாடப்புறா சீதை. அவளது பேச்சும் சிரிப்பும். தன் மீதுள்ள கறையைத் தேய்த்துக் கழுவுவனபோல் இருந்தன அகலிகைக்கு. அவள் வந்த போதுதான் அகலிகையின் அதரங்கள் புன்சிரிப்பால் நெளியும். கண்களில் உல்லாசம் உதயவொளி காட்டும்.

வசிஷ்டரின் கண் பார்வையிலே வளரும் ராஜ்ய லக்ஷ்யங்கள் அல்லவா? சரயூ நதியின் ஓரத்திலே ஒதுங்கி இரு தனி வேறு உலகங்களில் சஞ்சரிக்கும் ஜீவன்களிடையே பழைய கலகலப்பைத் தழைக்க வைத்து வந்தார்கள்.

அகலிகைக்கு வெளியே நடமாடி நாலு இடம் போவதற்குப் படிப்பற்று இருந்தது. சீதையின் நெருக்கமே அவளது மனச் சுமையை நீக்கிச் சற்றுத் தெம்பை அளித்தது.

பட்டாபிஷேக வைபவத்தின்போது அயோத்திக்கு வருவதாக ஒப்புக் கொண்டிருந்தாள். ஆனால் அரண்மனைக்குள் ஏற்பட்ட உணர்ச்சிச் சுழிப்புக்குத்தான் என்ன வலிமைஒரே மூச்சில் தசரதன் உயிரை வாங்கி, ராமனைக் காட்டுக்கு விரட்டி, பரதனைக் கண்ணீரும் கம்பலையுமாக நந்திக்கிராமத்தில் குடியேற்றி விட்டது.

மனுஷ அளவைகளுக்குள் எல்லாம் அடைபடாத அதீதசக்தி, ஏதோ உன்மத்த வேகத்தில் காயுருட்டிச் சொக்கட்டான் ஆடியதுபோல், நடந்து முடிந்துவிட்டது.

வசிஷ்டர்தான் என்ன, சர்வஜாக்கிரதையோடு மனுஷ தர்மத்தின் வெற்றியாக ஒரு ராஜ்யத்தை ஸ்தாபிக்கக் கண்ணில் எண்ணெயூற்றி வளர்த்தார். அவருடைய கணக்குகள் யாவும் தவிடுபொடியாகி, நந்திக் கிராமத்தில் நின்றெரியும் மினுக்கு வெளிச்சமாயிற்று.

சரயூ நதிக் குடிசை மறுபடியும் தம்பமற்று விழுந்தது என்று சொல்லவேண்டும். கோதமன் தர்ம விசாரமெல்லாம் இந்தப் பேய்க் காற்றில் சூறை போயிற்று. மனசில் நம்பிக்கை வறண்டு சூன்யமாயிற்று.

அகலிகைக்கோ? அவளது துன்பத்தை அளந்தால் வார்த்தைக்குள் அடைபடாது. அவளுக்குப்புரியவில்லை. நைந்து ஓய்ந்து விட்டாள். ராமன் காட்டுக்குப் போனான். அவன் தம்பியும் தொடர்ந்தர். சீதையும் போய்விட்டாள். முன்பு கற்சிலையாகிக் கிடந்தபோது மனசு இருண்டு கிடந்த மாதிரி ஆகிவிட்டது. ஆனால் மனப் பாரத்தின் பிரச்சனை மட்டும் தாங்க முடிய வில்லை

கருக்கலில் கோதமர் ஜபதபங்களை முடித்துக்கொண்டு கரையேறிக் குடிசைக்குள் நுழைந்தார்.



படிப்பகம்

www.padippakam.com

அவர் பாதங்களைக் கழுவுவதற்காகச் செம்பில் ஜலத்தை ஏந்தி நின்ற அகலிகையின் உதடு அசைந்தது.

"எனக்கு இங்கு இருப்புக் கொள்ளவில்லை. மிதிலைக்குப் போய் விடுவோமே"

"சரி, புறப்படு... சதானந்தனையும் பார்த்து வெகு நாட்களாயின" என்று வெளியே இறங்கினார் கோதமர்.

இருவரும் மிதிலைநோக்கி நடந்தார்கள். இருவர் மனசிலும் பளு குடியேறி அமர்ந்திருந்தது. கோதமர் சற்று நின்றார்.

பின் தொடர்ந்து நடந்துவந்த அகலிகையினுடைய கையை எட்டிப்பிடித்துக் "கொண்டார், நடந்தார், பயப்படாதே" என்றார்.

இருவரும் மிதிலை நோக்கி நடந்தார்கள்.

(தொடரும்)

## முரண்

நிஜமாயிருக்கிறேன்
முரணானவன் என
முகம் சுழிக்கிறார்கள்

மாக்கோலம் போடுவது
மருதாணி இடுவது
பூச்சரம் கொடுத்து
கோயிலுக்கு போவது
இப்படி எதுவுமே
என்னிடத்தில் இல்லாததால்
விடிவேதும் இல்லாது
வேதனைப்படுகிறேனாம்.

இவர்கள் திரைப்படம் பார்க்கத்
திரள்வது சரியாம் – நான்
படித்துப் படித்தே
பாழாய்ப் போனேனாம்!

"வாயடக்கம் இல்லாமல்
வாதாடக் கூடாது
ஆண்களுக்கெதிரே
உட்கார்ந்து பேசாதே
கூட்டத்திற்கு போவதா . . .
கூடவேக் கூடாது"
குதறுகிறார்கள்
பல்லுடைத்து ரத்தம் வழிய!

கழுத்துத் தெரியாமல்
இழுத்துப் போர்த்தி
தலைகுனிய
தடம் பார்த்து
நடை நடந்தால்
வாழும் போது மட்டும்
இந்த மக்குக்குள்
எனையொரு
"நல்ல பெண்"ணெனச்
சொல்லும்
ஒன்றைத் தவிர . . .
ஒன்றையுமே – என்னால்
சாதிக்க முடியாது!

அடங்காப்பிடாரி யென
ஆசைத்தீரக் கத்தட்டும்
அதற்குமேல் என்னவுண்டோ
எல்லாமேச் சொல்லட்டும்.

நான்,
நிஜமாகத்தானிருப்பேன்
இவர்கள்
முரணானவள் என
முகம் சுழித்தே
வாழட்டும்!

– இளம்பிறை



படிப்பகம்

www.padippakam.com

வாசகர்கள் தாங்கள் எதிர் கொண்ட அனுபவங்களை மற்றவர்களிடம் பகிர்ந்துக் கொள்ள வேண்டும் என்ற விருப்பமிருப்பின் 'பெண் உரிமை' யின் எதிரொலிப்பு பகுதிக்கு எழுதியனுப்புமாறு 'மே–அக் 98 இதழில் அறிவித்திருந்தோம். அந்த அறிவிப்பையொட்டி வந்த அனுபவங்களை பிரசுரிக்கிறோம். - ஆசிரியர் குழு

# எதிரொலிப்பு

நான் பத்தாம் வகுப்பு பெரியம்மா வீட்டில் தங்கி படித்துக் கொண்டிருந்தேன். ஒரு சமயம் நானும், 45 வயதிற்கும் மேலான பெரியப்பாவும் மட்டும் வீட்டில் இருக்க நேர்ந்தது. மதியம், பரிட்சைக்காக தயாராகிக் கொண்டிருந்தேன். 'எனக்கு ஒரு உதவி செய்வாயா?", 'இதை பெரியம்மாவிடம் சொல்லாதே", என்று அவர் கேட்கும் போதே நோக்கம் புரிந்தது. பதிலுக்கு ஏதோ உளறிவிட்டு பரிட்சைக்குச் சென்று விட்டேன். வேறு ஒரு சமயம் பெரியம்மாவிடம் இதைப் பற்றி பேசியபோது, என் மீதே குற்றம் சாட்டினார். மேலும்,இது நடந்தவுடன் தன்னிடம் வந்து சொல்லியிருக்க வேண்டும் என்றார். தனியாக பெரியப்பாவிடம் பேசி, நடந்ததை ஊர்ஜிதப்படுத்திக் கொண்டார். ஆனால் என் முன் அவரை விசாரிக்கத் தயாராக இல்லை. இன்று வரை அது ஒன்றுமில்லாத, சாதாரண விஷமாகவே உள்ளது.

வெளியூரிலிருந்த சித்தி வீட்டிற்குச் சென்றிருந்தேன். ஒரு நாள், உடைமாற்றிக் கொண்டிருக்கையில் அறையின் பிற்பகுதியில் ஒளிந்திருக்கிறான் சித்தியின் மகன். என்னைவிட 3 வயது இளையவன். அன்று இரவு தூங்கும் என்னை டார்ச் லைட் அடித்து எழுப்பி, "ஏதோ காலையில் கொஞ்சம் அதிகமாகவே பார்த்துவிட்டேன். நீ ஒன்றும் நினைக்கமாட்டாயே. நாமெல்லாம் மாடர்ன் தானே, என்றான். மறுநாள் சித்தியிடம் இதுபற்றி பேசினேன். ஆனால் அவன் இது எதுவுமே நடக்கவில்லை என்று சொல்லி விட்டான். சித்தியும் நான் பொய் சொல்வதாகச் சொல் லிவிட்டார். அவரால் தன் மகன் இப்படி செய்திருக்கக் கூடும் என்று சந்தேகிக்கக்கூட முடியவில்லை.

இந்த சமுதாயத்தில் இது போன்ற சம்பவங்கள் ஏன் நடக்கின்றன? என்னைவிட 30 வயது மூத்தவரும் (மகள் முறை) என்னை விட 3 வயது இளையவனும் (அக்கா முறை) இப்படிச் செய்ய காரணமென்ன? இவர்களை எப்படி மாற்றுவது? பழிவாங்குவதா இல்லை இவர்கள் இவ்வளவுதான் என்று விட்டுவிடுவதா?

13 வயதேயானவன் டி.வி பார்ப்பதும், சினிமா பார்ப்பதுமாய் இருப்பவன். அவன் மனதில் இவற்றின் தாக்கம் தான் இப்படிச் செய்யத் தூண்டி யிருக்கின்றது. சமூக சீரழிவின் பிரதிபலிப்பு பெரியப்பாவிடம் இருக்கிறது. அதனால் தான் மகளைப் போன்ற என்னிடமே கேவலமாக நடந்து கொண்டார். பெரியம்மா படித்தவர், முற்போக்கானவர். சித்தி ஒரு விஞ்ஞானி. ஆனால்



படிப்பகம்

www.padippakam.com

இருவருமே சமுதாயம் எதிர்பார்க்கும் 'பரிபூரண' பெண்களும் கூட. அதனால் தான் தம்குடும்பத்தார் தவறாக நடந்து கொண்ட போதும் குடும்பத்தில் குழப்பம் வருவதை தவிர்க்க, அந்த விஷயத்தை கண்டு கொள்ளாமல் விட்டுவிட்டனர்.

இரண்டு சந்தர்ப்பங்களிலும் நான் வீட்டிலிருந்து தள்ளியிருந்தேன். அப்பா இல்லாத பெண் வேறு, கேட்க ஆளில்லை. தற்காலிகமாக அவரை சார்ந்திருப்பதால் பெண்ணை எப்படி வேண்டுமானாலும் பயன்படுத்த தயாராகி விட்டார்கள். இரு குடும்பங்களும் சமுதாயத்தில் பெரிய மனிதர் பட்டம் பெற்றவை. பணம் படைத்தவை.

இந்த சம்பவங்கள் என்னை மனவருத்தம் கொள்ள வைக்கவில்லை. மாறாக அவற்றிலிருந்து நான் கற்ற பாடங்களை மற்றவர்களுக்கும் சொல்ல விரும்புகிறேன். இது ஏதோ எனக்கு மட்டும் நடந்தது அல்ல. இதுபோன்ற அனுபவங்கள் எல்லா பெண்களுக்கும் ஏற்பட்டிருக்கும். இவை எனக்கு தன்நம்பிக்கையோடு பிரச்சனைகளை எதிர்கொள்ளும் திடத்தை தந்திருக்கின்றன. பெண்களை கேவலப்படுத்துபவர்களை கண்டவுடனே இனம் காண கற்றுத்தந்திருக்கின்றன. இதுபோன்ற கொடுமைகளை அனுபவிக்கும் பெண்கள் பயந்து தங்களுக்குள்ளே குமுறிக் கொள்ளாமல், தீரத்துடன் அவற்றை கையாள வேண்டும்... அதே சமயம் பிரச்சனைகள் வந்து விடுமோ என்று ஒதுங்காமல் அவற்றை எதிர்த்து துணிவோடு போராட வேண்டும். என்று விரும்புகிறேன்.

## விழித்தெழு

விழித்தெழு பெண்ணே
சிறைப்பட்டிருந்தது போதும்
கம்பியை வளைத்து வெளியே வா!
பூக்களில் பிறந்தவளாயிரு
சூரியனையும் சுட்டெரிக்க கற்றுக்கொள்
மழலைப் போல் மென்மையாயிரு
உலகையும் விழுங்கப் பழகு
படுத்தால் புற்கள் போதும் என்றிரு
நிமிர்ந்தால் வானம் தலையில் முட்டட்டும்
போதும் முடங்கிக் கிடந்தது
எழு,
விடியல் தொடும் தூரம் தான்!

- ஷீபா



படிப்பகம்

www.padippakam.com

# பெரு பெண்களின் புரட்சிகர பாதையை நோக்கி

முதலாளித்துவ நாடுகளில் 1960 – 70 களில் பெண்கள் விடுதலை இயக்கம் குட்டி முதலாளித்துவ பெண்களின் தலைமையில் வளர ஆரம்பித்தது. குட்டி முதலாளித்துவ பெண்களின் இந்த இயக்கம் ஏகாதிபத்திய எதிர்ப்புகளின் அடிப்படையில் உருவானது. இவ்வியக்கம் நடுத்தர வர்க்கப் பெண்களிடையே பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது.

ஆனால் 80 களில் இந்த இயக்கம் பின்னடைவை பெற்றதுபல பெண்கள், பெண்ணுரிமை கோரும் முதலாளித்துவ இயக்க த்திற்குள் ஈர்க்கப்பட்டனர். 1980/க்குப்பின்,தேசிய விடுதலை மற்றும் உழைக்கும் வர்க்க இயக்கத்தின் வளர்ச்சிக் கட்டத்தில், உழைக்கும் வர்க்கப் பெண்களும் செயலூக்கத்துடன் வேலை செய்ய ஆரம்பித்தனர்.இந்நிலையை வளர்ச்சியடைந்த நாடுகளிலும், ஒடுக்கப்பட்ட நாடுகளிலும் கண்கூடாகப் பார்க்க முடிந்தது. முதலாளித்துவப் போக்கு மக்களிடமிருந்து விலகி, பெண்கள் பிரச்சனைக்கும், சமூக மாற்றத்திற்கும் எவ்வித உறவும் இல்லை என்ற கருத்தாக்கத்திலிருந்து உ.வ. பெ.அ முற்றிலும் முறித்துக் கொண்டது. மறுபுறம் பாட்டாளி வர்க்க வளர்ச்சி

> பெருவில் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் சுரண்டலையும், பிற்போக்கு நிலவுடமை உற்பத்தியை, வீழ்த்தி புதிய சனநாயக அரசமைப்பதற்கான ஆயுதப்போராட்டம் பெருகம்யூஸ்ட் கட்சி தலைமையில் முன்னேறி வருகின்றது.ஆயுதப்போராட்டம்தொடங்கப்பட்ட கடந்த 20 வருடங்களில், போராட்டம் முன்னேறி, இன்று நாட்டின் பலபகுதிகள் கம்யூனிஸ்ட் கட்சியின்கட்டுப்பாட்டில் உள்ளன. புதிய சனநாயகப் பாதையைநோக்கிய போராட்டமானது,இனி வெற்றியை நோக்கி முன்னேறிச் செல்லும். பெரு கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் புதிய சனநாயக புரட்சியின் வளர்ச்சியோடு முன்னேற்றம் கண்ட பெண்கள் இயக்கத்தைப் பற்றி சுருக்கமாகக் காண்போம் .

போக்கின் விளைவாக உழைக்கும் வர்க்கம் மற்றும் விவசாயப் பெண்கள் அணிதிரள ஆரம்பித்தனர். இந்த இயக்கங்கள் மூலமாக அவர்களின் தனித்தன்மையைக் காக்க, ஆணாதிக்கத்திற்கும், சமூக ஒடுக்கு முறைக்கும் எதிராக சமூக விடுதலைக்கான கோரிக்கைகளை முன் வைத்தனர். இந்நிலையில் முதலாளித்துவ போக்குகள் தொடர்ச்சியான பரபரப்பை பெற்றன. ஆனால் சமூக மாற்றத்திற்கான பெண்கள் அமைப்போ முழுமையாக மறைக்கப் பட்டது. இன்று உலகை சுற்றி நடந்துக் கொண்டிருக்கும் புரட்சிகர மற்றும் தேசிய விடுதலை இயக்கங்களின் வளர்ச்சிக் கட்டத்தில் உண்மையான பெண் விடுதலைக்கான இயக்கங்களும் வளர்ந்து வருகின்றது.



படிப்பகம்

www.padippakam.com

இந்த அடிப்படையில் பெரு இளம் பெண்கள் இயக்கம் வளர ஆரம்பித்தது. அரை காலனிய அரை நிலப் பிரபுத்துவநாடான பெருவிலும் பெண்கள் பிரச்சனைகளை எதிர்த்து கடுமையாக போராட ஆரம்பித்தனர்.

பின்தங்கிய நாடான பெருவில் நிலபிரபுத்துவ மற்றும் கிருத்துவ மரபுகள் ஆழமாக பதிந்துள்ளன. இங்கு பெரும்பாண்மை பெண்கள் படிப்பறிவற்ற வர்கள். குடும்ப பொறுப்பே வாழ்க்கையின் முதன்மையான நோக்கமென்று கருதுகின்றனர். பெருவில் பெண்களின் வீரமான போரட்டத் தினால் பெரு புரட்சியில் முக்கிய பங்கை ஆற்றி வருகின்றனர். இவர்களின் புரட்சிகர இயக்கம் லத்தின், அமெரிக்கா மற்றும் ஏனைய நாடுகளிலுள்ள உழைக்கும் வர்க்க மக்களுக்கும், பெண்களுக்கும், உற்சாகம் ஊட்டுகின்றது.

இந்தப் பெண்கள் முன்னணி ஆரம்பத்திலேயே 1920/காலக்கட்டத்தில் பெரு கம்யூனிசக் கட்சியின் நிறுவனராக மாரியடேகு பெண்கள் இயக்கத்தில் முதலாளித்துவ பெண்ணியம், குட்டி முதலாளித்துவ பெண்ணியம், பாட்டாளி பெண்ணியம் என்று மூன்று போக்குகள் உள்ளதை ஆராய்ந்தார். இவர், பல்கலைக் கழக மற்றும் தொழிற்சங்கப் பெண்களின் மத்தியில் தனி கவனம் செலுத்தி வேலை செய்யும் படி கட்சியை நிர்பந்தித்தார்.

இந்த அடிப்படையில் 1964/ஆம் ஆண்டு பெருவில் கம்யூனிசக் கட்சியின் தலைமையில் உருவான புரட்சிகர மாணவர் முன்னணியில் விவசாயப் பின்னணியுடைய சில, பெண் தொழிலாளர்களும், பல்கலைக்கழக மாணவர்களும், இணைந்தனர். இப்பெண்களில் பெரும்பான்மையோர் ஆண்டஸ் மலை அடிவாரத்தில் அமைந்துள்ள அயகூசோ என்ற ஊரைச் சார்ந்தவர்கள் இவர்கள் குட்டி முதலாளித்துவ பெண்ணியத் திற்கும், பாட்டாளி புரட்சிகர நிலைப்பாட்டிற்கும் உள்ள வேறு பாட்டை உலகிற்கு எடுத்துக் காட்டினர். இப்பெண்கள் முன்னணி ஆரம்பத்திலேயே தான் மீண்டும் மாரியடேகு பாதையை பின்பற்றுவதுதங்களின் நோக்க மாகக் கொண்டு செயல்பட்டது.

அந்த சமயத்தில், வெகுசிலரே கம்யூனிஸ்ட்டுகளின் இந்தப் புரிதல் நல்ல விளைவைக் கொடுக்கும் என்று தீவிரமாக நம்பினர். நான்காண்டுகளுக்குப் பிறகு, அயோகூசோவின் பெண்கள் அமைப்பினர் தங்கள்கொள்கைகளையும் செயல் திட்டங்களை யும் வெளிப்படையான அறிக்கையின் வாயிலாக அறிவித்தனர். பெண்கள் பிரச்சனை மீதான மாரியடேகுவின் ஆய்வை மீண்டும் ஏற்றுக் கொண்ட,தோழர் கன்சாலோவின் தலைமையிலான சிவப்புக் குழுவினர், 1960களில் திரிபுவாதத்தை எதிர்த்து நடத்திய போராட்டத்தின் பலன்களே மேற்கூறிய இவ்வெற்றிகள். இந்த முலப் போராட்டத்தில் பல தலைமைப் பெண்கள் பங்காற்றினர். சிவப்புப் பிரிவின் ஸ்தாபக உறுப்பினரும், திரிபுவாதத்தை எதிர்த்த உறுதியான போராளியுமான தோழர் அகஸ்ட்டாலா டோரே அல்லது நோரா இதற்கு மிகச் சிறந்த எடுத்துக்காட்டாவார். 1988ல் ஒரு சண்டையில் இறக்கும் வரை கட்சியின் மையக்குழுவின் மிகச்சிறந்த உறுப்பினராக இருந்து வந்தார்.


படிப்பகம்

www.padippakam.com

1973 ஆம் ஆண்டு மரியடேகுவின் கொள்கையின் அடிப்படையில் 'பிரபலமான' பெண்கள் அமைப்பு (MFP) நிறுவப்பட்டது. பாட்டாளியின் கொள்கையைப் பரப்பவும், புரட்சிகரவளர்ச்சியில் பெண்விவசாயிகளின் முக்கியத் துவத்தை விளக்கவும் தலைமை உட்பட (MFP) உறுப்பினர்களில் பெரும் பான்மையானோர், அவர்களின் செயல்பாடுகளை குறிப்பாக கிராமப்புறபகுதிகளிலும் வளர்த்தனர்.

1975 ஆம் ஆண்டு அயககுகோ பகுதிக்கு வெளியே நாடு முழுவதும் MFP யின் அமைப்பு வேலைகள் பரவவேண்டும் என்று திட்டமிட்டனர். அந்த ஆண்டே MFP யின் செயல்பாடுகளை ஒருங்கிணைக்கவும், உடனடி தேவைகளை ஒட்டி திட்டமிடவும் MFP அதன் முதல் தேசிய மாநாட்டை நடத்தியது. இந்த மாநாட்டிற்குப்பின் "மரியடேகுவின் தலைமையில் முன்னேறுவோம். பிரபலமான பெண்கள் இயக்கத்தைக் கட்டியமைப்போம்" என்ற கோரிக்கையை முன்வைத்து



அதன் கொள்கை அறிக்கையை வெளியிட்டது. இந்த தேசியமாநாடு உலக வர்க்கத்தன்மையைத் தூக்கிப்பிடித்து, அனைத்து பெண்கள் இயக்கத்தையும் ஒருங்கிணைக்க வழிவகுத்தது. இந்த மாநாட்டிற்குப்பின் பெண்களை உற்பத்தியில் ஈடுபடுத்துவதும் அவர்களுக்கு தொழிற்சங்க அனுபவங்களைப் பெறவைப்பதும், அவர்களை பாட்டாளிக்கட்சியுடன் ஐக்கியமாக்குவதும் அடிப் படை அரசியல் நோக்கமாகக் கொண்டு தேசிய ஒருங்கிணைப்புக் குழு உருவாக்கப்பட்டது.

'அரைநிலப்பிரபுத்துவ, அரைகாலனிய சமூகத்தில், பெண் கள் அரசியல் ஒடுக்குமுறை ஆணாதிக்க ஒடுக்குமுறை, மத மற்றும் குடும்ப ஒடுக்குமுறை போன்ற நான்கு வகையான ஒடுக்கு முறைகளுக்கு இரையாக்கப் படுவதை, மாவோ வெளிப் படுத்தியதின் அடிப்படையில், இந்த இயக்கம் செயல் பட்டது.

போராடும் மக்கள் கம்யூனிசப் பெண்களின்பின் அதிக எண்ணிக்கையில் அணிதிரண்டனர். குறுகிய காலத்தில் MFP வேகமாக வளர்ந்தது. நிலவிவரும் சமூக நிலையை அழித்து புதிய அமைப்பை உருவாக்குவதன் மூலமாக மட்டுமே பெண்விடுதலை சாத்தியம் என்ற புரிதலின் அடிப்படையில் MFPயும் ஆயுதப் போராட்டம் செய்வதற்கான தயாரிப்புகளில் பங்கேற்றது.

1980 ஆம் ஆண்டு மக்கள் யுத்தத்தின் ஊக்குவிப்பால் பெண்கள் இயக்கமும் புதிய பாதையைத் தேர்ந்தெடுத்தது பெண்களும் கெரில்லா போரில் கலந்து


படிப்பகம்

www.padippakam.com

கொண்டனர். கடுமையான கெரில்லா வாழ்க்கையில் பங்கெடுத்தது மட்டுமில்லாமல் தலைமையும் கொடுத்தனர். துவக்கத்தில் பெரும்பான்மையான பெண் கெரில்லாக்கள் குட்டி முதலாளித்துவ பின்னணி உடையவர்களாக இருந்தனர், ஆனால். 1982ஆம் ஆண்டு முதல் கிராமப்புறபகுதியில் மக்கள் குழுக்களை உருவாக்க ஆரம்பித்த பிறகு விவசாயப் பெண்களும் போராடும் சக்தியுடன் இணைந்துக் கொண்டனர், விவசாயக் குழுக்களின் மூலம் பெண்கள் உட்பட கிராமம் முழுவதும் ஆயுதப் பயிற்சி கொடுக்கப்பட்டது. பெண்கள் முடிவெடுக்கும் குழுக்களில் செயலூாக்கத்துடன் பங்கெடுப்பதற்கு ஊக்கமளிக்கப்பட்டனர்.

இத்துடன் சூழ்நிலையை ஒட்டி பெண்களின் குறிப்பிட்ட தேவை மற்றும் கோரிக்கைகளுக்காக மக்கள் திரள் அமைப்பு கட்டப்பட்டது. நகரங்களில் இருந்த பெண்களும் உழைக்கும் வர்க்க போராட்டத்திற்கு உதவவும் அதில் பங்கெடுக்கவும் ஊக்குவிக்கப்பட்டனர். நகர குடிசைவாழ்ப் பகுதிகளில் பெண்கள், அவர்களை எதிர்நோக்கியுள்ள பிரச்சனைகளுக் கெதிரான போராட்டத்தில் தலைமைப் பங்காற்ற செயலூக்க மளிக் கப்பட்டனர். குடிசை ஒழிப்பை எதிர்த்த போராட்டங் களிலும், அடிப்படைத் தேவைக்கான போராட்டங்களிலும் பெண்களே முன்னணி வகுத்தனர்.

வர்க்க உணர்வுக் கொண்ட ஆண் மற்றும் பெண் தொழிலாளர்கள் "வர்க்க உணர்வுக் கொண்ட தொழிலாளர் மற்றும் உழைப்பாளர் இயக்கத்தில்" அமைப்பாக்கப்பட்டனர். அதிக எண்ணிக்கையில் மக்கள் தொகை கொண்ட பரவலான நகர்ப்புறங்களிலுள்ளவர்கள்" அருகிலுள்ள வர்க்க உணர்வுக் கொண்ட இயக்கத்தில்" அமைக்கப்பட்டனர், 1990 ஆம் ஆண்டு புரட்சிக்கு அதிக அளவு உதவும் மக்கள் தொகை கொண்ட பகுதிகளிலும். "மக்கள் போராட்டக் குழுக்கள்" உருவாக்கப் பட்டது. நகரங்களில் புதிய அதிகாரம் குழந்தைப் பருவத்திலேயே இருந்தது.

நகர்புற குடிசைப் பகுதிகளில், பெண்களும் ஆண்களைப் போலவே சம உரிமை மற்றும் கடமைகளைக் கொண்டு, கூட்டு வாழ்வுக்கான அமைப்புகளை உருவாக்கினர். ஆரம்பத்தில், சில பகுதிகளில் திரிபுவாதக் கட்சிகளால் "மக்கள் உணவகம்" "பால்குவளைக் குழுக்கள்" உருவாக்கப்பட்டது. இதில் வர்க்க உணர்வுகொண்ட பெண்களும் ஆண்களும் தலைமை ஏற்று அரசாங்கம் தருபவற்றை ஏற்றுக் கொள்ள மறுப்பது, அவைகளை பெறுவது மக்களின் உரிமையென கோரிக்கைகளை எழுப்பினர். இதுபோல் செயல்பாடுகளின் மூலம் ஒடுக்கப்பட்ட பெண்கள் அரசியல் மற்றும் அமைப்பு அனுபவங்களைப் பெற்றனர்.

இப்போராட்டங்களில் நூற்றுக்கணக்கானப் பெண்கள் எதிரியால் சிறையிலடைக்கப்பட்டனர். ஆனால், சிறையிலும் எந்தப் போராட்டம் நடந்தாலும், பெண்களே முக்கிய பங்காற்றினர். பெரும்பான்மையானோர் ஆதிக்க சக்தியால் கொல்லப் பட்டனர். அரசு சக்திகள் சாதாரணப் பெண்களை கற்பழிப்பது என்பது சாதாரணமான நிகழ்ச்சியானது. இத்துணை இராணுவ



படிப்பகம்

www.padippakam.com

கொடூரத்திலும் பெண்கள் அமைதியாக வில்லை... அவர்கள் இந்த கொடூரத்தை எதிர்த்து நின்றனர்.

மாவோவின் "அரசியல் ஆணையில் வை" என்ற முழக்கமே இத்துணை செயல்பாடுகளுக்கும் பின்னணியாக இருந்தது. பெரு கட்சியைப் பொறுத்தவரை குழு தலைமையை ஒட்டிய கேள்வியாகட்டும், பொறுப்புகளை கொடுப்பதாகட்டும் முன்னணிசக்திகள் மற்றும் அரசியல் மட்டத்தை வைத்தே தீர்மானிக்கப்பட்டதே ஒழிய அவள் /அவரின் சமூகத் தொடர்போடு குறிப்பான திறமையை வைத்து தீர்மானிக்க வில்லை. எந்தப் பெண் அல்லது ஆண் தோழரும் அவரிடம் குறிப்பான அறிவோ திறமையோ இல்லை என்பதற்காக ஒதுக்கப்படவில்லை. இந்த நிலைபாடு பெரு கம்யூனிச கட்சியின் பபு, தலைமையை பற்றிய பிரச்சனையாகட்டும், பொறுப்புகளை பிரித்து கொடுக்கும் கண்சாடையாகட்டும் இக்கொள்கையே "நிலை நிறுத்தப்பட வில்லை எனில்" பெண்கள் அவர்களின் பரம்பரையான பொறுப்புகளில் இருந்து மீட்டெடுத்திருக்கப் படமாட்டார்கள். எந்த வேலையும் வெற்றிகரமாக நிறைவேற்றப் பட வேண்டுமெனில் அரசியல் வழியில் மக்களை நம்பி நடைமுறைப்படுத்தப்படும்போது மட்டுமே முடியும். இவ்வழியின் மூலமாகவே பெரு கம்யுனிசக் கட்சியில் உள்ள பெண் தோழர்கள் அவர்களின் திறமையை வளர்த்துக் கொண்டனர். கமிட்டியின் தலைமைப் பதவியை அடைந்தனர்.

பெருவின் புரட்சிகர இயக்கத்தில், பெண்கள் இயக்கத்துடன் ஒடுக்கப்படும் மக்களின் போராட்டங்களுடன் இணைந்ததனாலே, பெண்கள் அவர்களின் இரண்டாம் தர நிலையைத் தூக்கியெறிந்து சமமாக தன்னம்பிக்கையுள்ள, புரட்சிக்காக தங்களின் பெரும்பான்மையான திறமைகளை அளிக்கும் போராளிகளாகத் திகழ்கின்றனர்.

ஆயுதப் போராட்டம் நடத்திவரும் 1980 முதல் பெரு கம்யூனிசக் கட்சி 24 மாகாணங்களுள் 19 மாகாணங்களில் பரவியுள்ளது. இந்தப் பெரு மக்கள் யுத்தத்தில் அதிகளவுப் பெண்கள் பங்கெடுத்துள்ளது தான், இதன் சிறப்பம்சம் மறுசீரமைக்கப் பட்ட பெருகம்யூனிசக் கட்சி முதல் காங்கிரசில் பெண்களே கட்சியின் மத்திய குழுவிற்குத் தேர்வு செய்யப் பட்டனர். தற்போதும் கட்சியின் உயர்நிலையான மத்தியக் குழுவில் குறைந்த பட்சம் 50% வது பெண்கள் உள்ளனர். இதிலிருந்து பெருவில் புதிய ஜனநாயக சமூகத்தை படைக்க பெண்கள் முக்கியமான தலைமைப்பங்காற்றி வருவதை கண்கூடாக அறியமுடிகிறது.

**அன்பார்ந்த வாசகர்களே!**

**"பெண் உரிமை" இதழை படியுங்கள். உங்கள் தோழர்களுக்கும் அறிமுகப்படுத்துங்கள்.**



படிப்பகம்

www.padippakam.com

# ரேசன் கடை ஊழலை எதிர்த்தப் போராட்டம்

இந்திய அரசு புதிய பொருளாதாரக் கொள்கையின் படி, தனது பட்ஜெட்டில் 5 ரேசனை குறைத்து மக்களின் வயிற்றலடித்துள்ளது. இப்படி ஒரு பக்கம் அரசும் மற்றொரு புறம் ரேசன் கடை நிர்வாகிகள் ரேசன் பொருட்களின் அளவை குறைத்தும் அப்பொருட்களை கள்ள சந்தையில் விற்றும் கொள்ளை இலாபம் அடைகின்றனர். இக்கொள்ளைக்கு உள்ளூர் ஆதிக்க சக்திகளும், கட்சிகளும் பக்க பலமாய் நிற்கின்றன. இந்த ரேசன் ஊழல் சென்னையிலுள்ள பெரும்பான்மையான ரேசன் கடைகளில் நடைபெறுவது என்பது ஊரறிந்த உண்மை!

இந்த அடிப்படையில் தான், சென்னையிலுள்ள இராணி அண்ணாநகர் ரேசன் கடையிலும் 10கிலோ அரிசிக்கு 8 கிலோ, 10 லிட்டர் மண்ணெண்ணெய்க்கு 7 லிட்டர் மண்ணெண்ணெய் என்று ஊழல் தலைவிரித்தாடுகின்றது. இது பற்றாக்குறைக்கு மளிகை சாமான்கள் வாங்கினால் தான், ரேசன் பொருட்கள் என்று வற்புறுத்துவதும் வழக்கமாக இருந்து வருகின்றது. இந்த அநியாயத்தை தட்டி கேட்பவர்களை மிரட்டுவது என்பது இந்த ரேசன் கடை நிர்வாகிகளுக்கு கை வந்த கலை!

விலைவாசி ஒரு பக்கம் ராக்கட் போல ஏறி நிற்பதையும், மற்றொரு பக்கம் இந்த ரேசன் ஊழலும் பெருத்துக் கொண்டிருப்பதையும் தங்களுக்குள்ளே குமுறிக் கொண்டிருந்த இராணி அண்ணா நகர் மக்கள் ஒன்றிணைந்து போராட துணிந்தனர். அதற்கு முதல் கட்டமாக கடந்த டிசம்பர் மாதம் பொருட்களின் அளவு குறைப்பதை கையும் களவுமாகப் பிடித்து சுமார் 30 பெண்கள் எச்சரிக்கை விட்டனர். இப்படி பெண்கள் ஒன்று சேர்ந்து வந்ததைக் கண்டு மிரண்டுப் போன ரேசன் கடை நிர்வாகிகள் ஒரு வாரத்திற்கு சரியான எடை போட்டு விட்டு மீண்டும் பழைய நிலைக்கு வந்தனர்.

ஆனால் எச்சரிக்கை கொடுத்தும் இப்படி ஊழல் தொடர்வதை கண்ட இராணி அண்ணா நகர் மக்கள் கடந்த ஜூன் மாதம் பொங்கி எழுந்தனர். முதலில் ஊழலைக் கண்டித்து நோட்டீஸ் விநியோகித்தனர். பின் 17.6.99 அன்று மாலை 5.00 மணியளவில் ரேசன் கடை முன்பு சுமார் 150க்கும் மேற்பட்ட பெண்கள் ரேசன் கடை ஊழலை கண்டித்தும் மளிகை சாமான்கள் வாங்க வற்புறுத்துவதை எதிர்த்தும் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

இத்தருணத்தில் ரேசன் ஊழலில் பாதிப்புக்குள்ளான ஒருவர் ரேசன் கடை ஊழல் நிறுத்தப்படவில்லையானால் தான் தீக்குளிக்க தயார் என்று சத்தம் போட்டார். இந்த சத்தத்தை கண்டு உடனே ஜீப்பில் வந்த காவல்துறை ஆய்வாளர்தான் இனி ஊழலை தடுத்து நிறுத்த உதவியாக இருப்பதாக உறுதிக் கூறினார். ஆனால் போலிசின் இதுபோன்ற பல வாய் வாக்குறுதிகளை கேட்டு



படிப்பகம்

www.padippakam.com

ஏமாந்துப் போன இராணி அண்ணாநகர் மக்கள் "இனி நீங்களும் கூட்டு சேர்ந்து ஊழல் செய்யப் போகிறீர்கள். ஆனால், ஊழல் தொடருமாயின், எங்கள் போராட்டமும் நீடிக்கும்" என்று கூறினர்.

இதுப் போன்ற மக்கள் அனைவரும் சேர்ந்து நடத்தும் போராட்டம் தான் ரேசன் கடை ஊழலை ஒரு முடிவுக்கு கொண்டுவரும் என்பது உறுதி!

– தேன்மொழி

## அறைக்குள் வருமா ஆகாயம்

– மோகனாம்பாள் சீனிவாசன்.

பக்கத்து வீட்டுப்
பையன் கொடுத்த
கடிதத்துடன்
எரிக்கப்பட்டது
எனது கல்வியும்.

சமைக்க
துவைக்க
கோலமிட என
வரையறுக்கப்பட்டது
வாழ்க்கை

பொத்தி வைத்து
புருஷனுக்குக் கொடுக்க
கற்பு
அவசியமெனக்
கற்பிக்கப்பட்டேன்

விடுதலை மறுத்து
வாசலில்
கட்டப்பட்டிருக்கிறது நாய்
வீட்டுக்குள்ளே
கட்டப்படாமல் நான்.

– நன்றி தினமணிகதிர்

23–7–99 அன்று நெல்லையில் மாஞ்சோலை தொழிலாளர்களை விடுதலை செய்யக் கோரியும், தொழிலாளர்களுக்கு முறையான ஊதியமும், பிடித்தம் செய்யப்பட்ட சம்பள தொகையை வழங்கக் கோரி கிட்டத்தட்ட 4000 பேர், ஆட்சியாளர் அலுவலகத்திற்கு முன்பு ஆர்ப்பாட்டம் நடத்தினர். இவர்களின் கோரிக்கை ஏற்க மறுத்தது மட்டுமல்லாமல் இந்த பாசிச கருணாநிதி அரசு தாமிரபரணி நதிக்குள் தள்ளி 25க்கும் மேற்பட்ட (ஆண், பெண், குழந்தைகள் உள்பட) அப்பாவி மக்களை கொலை செய்ததை தமிழ்நாடு பெண்ணுரிமைக் கழகம் வன்மையாகக் கண்டிக்கிறது.



படிப்பகம்

www.padippakam.com

# பாலியல் வன்முறையால் பாதிக்கப்பட்ட இந்திய பெண்களின் கண்ணீரை துடைப்பவர் யார்?

வருத்தப்படக்கூடிய உண்மை என்னவென்றால் இன்று இந்த சமுதாயம் பாலியல் வன்முறைக்கு ஆளாக்கப்பட்ட பெண்ணைத்தான் விமர்சிக்கிறதே தவிர குற்றவாளியை அல்ல. இத்தகைய தகாத செயலை செய்வோர் உல்லாசமாய் இருக்க,பாதிக்கப்பட்ட பெண்தான் சமுதாயத்திற்கு பயந்து வெட்கி தலைகுனிய வேண்டியுள்ளது. அதனால் ஒரு பெண் பாலியல் வன்முறைக்கு ஆளாக்கப்பட்டால், அதனை வெளியில் சொல்லாமல் மறைக் கின்றனர். இதை அறைக்குள் பூட்டி வைக்கக் கூடிய விஷயமாகவும், வெளியிடக் கூடாத ரகசியமாகவும் நினைக்கின்றனர்.

எப்படி நாகரீக வளர்ச்சியின் அளவை கணக்கிட முடியாதோ அதுபோல் பெண்களுக்கு இழைக்கப்படும் குற்றங்களின் அளவையும் கணக்கிட முடியாது. இத்தகைய குற்றங்களுக்கு அளிக்கப்படும் தீர்ப்புகளின் தன்மையோ பிரச்சனைக்குரியது. இந்தியாவில் இந்தக் குற்றங்கள் நீதி என்ற பெயரால் எவ்வாறு மறைக்கப்படுகிறது என்பதை காண்போம்.

ஜெய்பூர் விடுதியில் ஒரு மாணவியை தொடர்ந்து கூட்டு கற்பழிப்பிற்கும், தகாத உடலுறவிற்க்கும் ஆளாக்கியிருப்பது எல்லோருக்கும் தெரிந்த உண்மையே. அந்த பெண்ணையும் அவருடைய குடும்பத்தையும் அரசியல் வாதிகள் மிரட்டி, அவர்களுக்கு எதிரான வழக்கைத் திரும்பப்பெறுமாறு வற்புறுத்தியிருப்பதிலிருந்து, அப்பெண்ணுக்கு எவ்வகையில் நியாயம் வழங்கப்பட்டிருக்கும் என்பது தெளிவாகின்றது.

இந்த ஜெய்ப்பூர் மாணவியின் சம்பவம் போன்று தினந்தோறும் ஆயிரமாயிரம் கொடுமைகள் நடக்கின்றன. இத்தகைய கற்பழிப்புகளுக்கு இடமாக பெரும்பாலும் காவல் நிலையங்களும் அரசாங்கத்தால் நடத்தப்படும் ஆதரவற்ற மகளிர் இல்லங்களுமே உள்ளன. உயர்ஜாதியை சேர்ந்த ஆண்கள் தங்கள் ஆதிக்க சக்தியை வெளிப்படுத்தும் வண்ணமாக, தாழ்த்தப்பட்ட பெண் களையும், தலித் மற்றும் பழங்குடி பெண்களையும் தொடர்ச்சியாக பாலியல் வன்முறை செய்து வருகின்றனர். அரசியல்வாதிகள் தங்கள் திட்டங்களை திணிப்பதற்கு கற்பழிப்பை ஆயுதமாக பயன்படுத்துகின்றனர்.

கற்பழிப்புகளும், கூட்டு கற்பழிப்புகளும் தொடர்ந்து ராணுவத்தினரால், அவர்கள் பாதுகாப்புக்குட்பட்ட இடங்களில் நடக்கின்றன. சட்டமும் இவர்களுக்கு துணை செய்வதால் இதனை தண்டிக்கவோ தடுக்கவோ முடிவதில்லை. அரசியல் செல்வாக்கு உள்ளவர்களும், குடிசைப் பகுதி தாதாக்களும் சட்டத்திற்கு பயப்படுவதில்லை. சட்டத்தை கையில் போட்டுக் கொண்டு பாலியல் வன்முறைகளை அஞ்சாமல் செய்கின்றனர்.

பெண்களுக்கு அவர்கள் குடும்பத்தினராலேயே ஏற்படும் தொந்தரவுகளும், கற்பழிப்புகளும் பெருகி வருகின்றன. ஆதிக்க சக்திகளும் அரசியல்வாதிகளும்



படிப்பகம்

www.padippakam.com

ஏழைப் பெண்களை மிரட்டியும், பயமுறுத்தியும் அவர்களை விபச்சாரிகளாக மாற்றும் லாபகரமான வியாபாரம் நாளுக்கு நாள் விருத்தியடைந்துக் கொண்டே இருக்கிறது. இத்தகைய கற்பழிப்பு சம்பவங்களில் வெளிச்சத்திற்கு வந்தவை மிகவும் குறைவே. பெரும்பாலான கற்பழிப்புகள் புகார் கூட செய்யப்படுவதில்லை.

இவ்வாறு கற்பழிப்பிற்கு ஆளானவர்களுக்கு உதவி செய்பவர்களையும் வாழ விடுவதில்லை. அவ்வாறு உதவி செய்பவர் களை பயமுறுத்தி, நாசப்படுத்தி அவர்கள் வாழ்க்கையையே போராட்டமாக மாற்றிவிடுகிறார்கள். கற்பழிக்கப்பட்ட பெண்ணிற்காக உதவிசெய்வது என்பது, போலீஸிற்கும், சட்டத்திற்கும், அரசியல் வாதிகளுக்கும், பணமுதலைகளுக்கும், தாதாக்களுக்கும் எதிராக செய்யும் போராட்டமே ஆகும். இதனால் நமது குடும்பமும், நமது நண்பர்களும் கூட நமக்கு எதிராக மாறிவிடுகிறார்கள். நமது முயற்சியையும் கூட கைவிடுமாறு வற்புறுத்துகிறார்கள். இவர்களையெல்லாம் எதிர்த்து செயல்படுவதென்பது அப்பெண் உளவியல் ரீதியாக மறுபடியும் கற்பழிப்புக்குள்ளாவதைப் போலாகும்!

சில துணிச்சலானப் பெண்கள் இதனை சவாலாக ஏற்றுக் கொண்டு தைரியத்துடன் போராடுகிறார்கள். அப்படிப்பட்ட பெண்களில் ஒருவர் தான் மதுரா. இவரது பெயரே கற்பழிப்புகளுக்கு எதிராக போராடுவதற்கான போராட்டச் சின்னமாக மாறியது. பழைய கதையாக இருந்தாலும் அவருக்கு நேர்ந்த கொடுமை வரலாற்றுச் சிறப்பு வாய்ந்தது... ஆகையால் இது எல்லோரையும் கவர்ந்துள்ளது.

மதுராவின் வழக்கு ஆரம்பித்து முப்பது வருடங்களும் கற்பழிப்பு சட்டத்திருத்தம் கொண்டு வந்து பதினெட்டு ஆண்டுகளும் நிறைவடைந்து விட்டன. ஆனால் இன்னும் நம்முடைய நாட்டில் "மதுராக்களின்" எண்ணிக்கை பெருகிக் கொண்டு தான் இருக்கிறது. மதுரா 1970 /80 காலக்கட்டங்களின் சின்னம் என்றால் 1990க்கென்று தனி சின்னங்கள் உள்ளன – அருணா சன்பக், ஜால்கான், பன்வாரி தேவி, ஜெய்பூர் விடுதி, விதுரா...

கடைசியாக குறிப்பிட்டசம்பவத்தில், கேரளத்தைச் சேர்ந்த, 16வயதான சகனா, விதுரா போலீஸ் ஸ்டேசனிற்கு அருகிலுள்ள இடத்தில் வசிக்கும் (இதிலிருந்து தான் இந்த வழக்கிற்கு இப்பெயர் கிடைத்தது) ஏழைக் குடும்பத்தைச் சார்ந்த பெண். இப்பெண், அவள் வீட்டிற்கு அருகிலுள்ள ஒரு பெண்மணியால் வீட்டு வேலை வாங்கித் தருவதாக ஏமாற்றி எர்ண குளம் என்னும் நகரத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளாள்.

எர்ணகுளத்தில் சகினா விற்கப்பட்டு, விபச்சாரியாக மாற்றப்பட்டாள் அவளுடைய பாதுகாவலன், அவள் அதற்கு உடன்படவில்லையென்றால் கொன்று விடுவதாக மிரட்டியுள்ளான். ஒன்றரை வருடங்களுக்கு இந்த ஆதரவற்ற பெண் அநேகப் பேரால் பாலியல் வன்முறைக்கு ஆளாக்கப் பட்டுள்ளாள். இதில் பெரும்பாலும் கேரளாவின் அரசியல் வாதிகளும், சமுதாயத்தில் பெரிய மனிதர்கள் தோரணையில் இருப்பவர்களுமே அடங்குவர்.



படிப்பகம்

www.padippakam.com

எதிர்பாராமல் அண்டை வீட்டுக்காரர் ஒருவர் சந்தேகத்தினால் கொடுத்த புகாரை அடுத்து சகினா ஒரு வீட்டில் பூட்டி வைக்கப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. அவள் கண்டு பிடிக்கப் பட்டவுடன் பதினெட்டு மாதகாலமாக தான் பாலியல் வன்முறைக்கு ஆளாக்கப்பட்டதை தெரிவித்தாள்.

அவளுடைய வாக்குமூலம் ஊர்ஜிதப்படுத்தக் கூடிய உண்மையாக இருந்தது. இந்த வாக்கு மூலம்,போலீஸ் அதிகாரிகள், டாக்டர்கள், அரசாங்க இன்ஜீனியர்கள், அரசியல் செல்வாக்குள்ளவர்கள் மற்றும் ஒரு சினிமா நடிகர் உட்பட பலபேரின் முகமூடிகளைகிழிப்பதாக இருந்தது. நாற்பத்தி ஐந்து பேர் இதில் சம்பந்தப்பட்டவர்களாகவும், அறுபத்தி ஐந்து பேர் குற்றவாளி களாகவும் நிருபிக்கப்பட்டனர். துப்புத்துலங்க ஆரம்பித்தவுடன் ஏகப்பட்டபேர் முன்ஜாமீனுக்காக நீதிமன்றத்தைத் தேடி ஓடினர்.

இத்தனை வலுவான சாட்சிகள் இருந்தும்,உயர் நீதிமன்றம் சகினாவை கொடுமைக்கு ஆளாக்கியவர்களின் மீதான வழக்குகளை ரத்து செய்துவிட்டது. குற்றவாளிகள் சகினாவுடன் உடலுறவு வைத்திருந்தாலும், இந்த உடலுறவு வலுக்கட்டாய மானதல்ல, சகினாவுடைய சம்மதத்துடன் தான் இது நடத்திருக்கிறது என்று தீர்ப்பு வழங்கப்பட்டது.

தீர்ப்பு என்ன சொல்கிறதென்றால்...'பணத்தைக் கொடுத்து உடலுறவு வைத்துக் கொள்ள நினைக்கும் ஒருவன் விருப்பமில்லாத பெண்ணிடம் செல்வது என்பது நம்பதகுந்ததாக இல்லை," குற்றவாளிகள் தப்பிப்பதற்காக நீதிபதி சகினாவை அவமதித்து சொல்கிறார்... 'இப்படிபட்ட பெண்களின் கூற்று ஏற்றுக்கொள்வதற்கு புனிதத்தன்மை வாய்ந்ததல்ல."

விதுராவின் தீர்ப்பு, மதுராவின் தீர்ப்புக்கு அடுத்தபடியாக வந்ததாகும். இதில் அதிர்ச்சி அடையும் தகவல் என்னவென்றால் பதினேழு வயது பெண்ணை, ஐந்து காட்டுமிராண்டிகள் தூக்கத்தில் நடக்கும் போது கற்பழித்தனர். அப்பெண்ணை அவர்கள் பாலியல் பலாத்காரம் செய்யும்போது, அவளுக்கு எப்படி இருந்தது போன்ற கொச்சையான கேள்விகளை நீதிமன்றம் அவளிடம் கேட்டது. அவள் அந்த சுகத்தை அனுபவித்தாளா? இல்லையா? போன்ற கேள்விகளைக் கேட்டு துன்புறுத்தியது கினிஷி மன் என்ற சைனுதீன் மற்றும் orsv/s state

குற்றவாளியின் உடம்பில் காயங்கள் இல்லாததால் குற்றவாளிக்கும் பாதிக்கப்பட்டப் பெண்ணுக்கும் இடையில் எந்த போராட்டமும் நடக்கவில்லை என்ற அடிப்படையில் உயர்நீதிமன்றம் இவர்களை விடுதலை செய்கிறது. மற்றொரு இடத்தில் பேருந்து நிற்குமிடத்திற்கு அருகில் ஒரு ஏழு வயது சிறுமி பாலியல் வன்முறை செய்யப்பட்டுள்ளாள். சாட்சிகள் இந்த சம்பவத்தில் உடைக்கப்பட்டுவிட்டன அவள் உடம்பில் கடித்த அடையாளங்கள் இருந்தன. (முகமது ஹபிப் V/s state)

இந்த பிரச்சனைக்கான ஒரே தீர்வு போராட்டமே. தற்போது இதற்காக போராடிவருபவர்கள் எல்லாம் நம்பிக்கைக்கும் தைரியத்திற்கும் எடுத்துக்காட்டாவார்கள். நம்பிக்கை இல்லாத போலீஸையும், சட்டத்தையும்,



படிப்பகம்

www.padippakam.com

சமுதாயத்தையும் சரிசெய்யாமல் இத்தகைய போராட்டங்களில் ஈடுபட்டால் நம் முயற்சி எல்லாம், விழலுக்கு இறைத்த நீர்போல் வீணாகத்தான் போகும்.

இத்தகைய பாலியல் வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்கள், கற்பழித்தவர்களாலும், அரசியல் செல்வாக்கு உள்ளவர்களாலும், பணம் படைத்தவர்களாலும் மட்டுமா பாதிக்கப்படுகிறார்கள்? இந்த ஒட்டு மொத்த சமுதாயம், குடும்பம், நண்பர்கள், சுற்றி இருப்பவர்கள், தன்னுடன் வேலை பார்ப்பவர்கள், யாரென்றே தெரியாதவர்கள் போன்ற எல்லோருடைய அவமானப் பேச்சுக்களுக்கும் ஆளாக வேண்டியிருக்கிறதல்லவா?

இதில் வருத்தப்படக் கூடிய உண்மை என்னவென்றால் இன்று இந்த சமுதாயம் பாலியல் வன்முறைக்கு ஆளாக்கப்பட்ட பெண்ணைத்தான் விமர்சிக்கிறதே தவிர குற்றவாளியை அல்ல.

பொறுப்புள்ள பத்திரிக்கை அலுவலகங்கள் கூட இந்த விஷயத்தில் அவதூறுகளை கிளப்புகின்றன. இத்தகைய விஷயங்களை தலைப்புகளாக போராடுவதை இந்த கொடூரமான சமுதாயம் விரும்புகிறது. இத்தகைய வன்முறையைக் கண்டு அதிர்ச்சி அடைபவர்கள், கற்பழிப்பு என்பது ஏதோ அறைக்குள் பூட்டி வைக்கக் கூடிய விஷயமாகவும் வெளியிடக் கூடாத விஷயமாகவும் நினைக்கிறார்கள்.

இந்த சமுதாயம் இத்தகைய கண்ணோட்டத்திலிருந்து மாறாதவரை எப்படி பாலியல் வன்முறையால் பாதிக்கப்பட்டப் பெண்கள் ஒரு தீர்வை காண்வார்கள்? பாலியல் வன்முறை மனித சமுதாயத்திற்கே எதிரான ஒரு குற்றமாகும்.

நம்மிடம் மதுராக்களின் வாழ்க்கைகளை மாற்றுவதற்கான ஆற்றல் உள்ளது. இந்த சவாலை ஏற்று சமூக மாற்றத்திற்கான போராட்டப் பாதையில் அணிதிரள்வோம்.

(மொழியாக்கம் – நியூ ஏஜ்)

**நண்பர்களே!**

**உங்கள் விமர்சன கடிதங்களை எழுதி இதழின் வளர்ச்சிக்கு உதவுங்கள்!**

**கதை, கட்டுரை, கவிதை போன்றப் படைப்புகளையும் அனுப்பி வையுங்கள்!**



படிப்பகம்

www.padippakam.com

விழுங்கப் பார்க்கிறது. இந்திய அரசோ, தனது கொடூர ராணுவ ஒடுக்குமுறையின் மூலம் காஷ்மீரை தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கப் பார்க்கின்றது. காஷ்மீர் மக்கள் எப்படியிருப்பது என தீர்மானிக்க வேண்டியது இந்தியாவோ, பாகிஸ்தானோ அல்ல! காஷ்மீர் மக்கள் தான்!! இதுதானே நியாயம்.

**கார்கில் போரின் நோக்கமும் விளைவுகளும்:**

தான் ஆட்சிக்கு வந்தவுடனே பொக்ரானில் அணு வெடிப்பு சோதனை நடத்தி போர் வெறியைத் தூண்டிய பா.ஜ.க அரசு, தான் ஆட்சியிழந்தவுடன் மக்கள் செல்வாக்கைப் பெருக்கிக்கொள்ள யுத்தத்தை நடத்துவதாக பல எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டியுள்ளனர். ஆனால் அனைத்து ஓட்டுக் கட்சிகளுமே போரை ஆதரிக்கின்றன. உண்மையில், இந்தப் போர் புதிய பொருளாதாரக் கொள்கையின் விளைவாக, அதிகரித்து வரும் ஆலை மூடல், வேலையின்மை, விலையேற்றம், பஞ்சம், பட்டினிச் சாவுகள், பெண்கள், தலித்கள், சிறுபான்மையினர் மீதான பெருகி வரும் ஒடுக்குமுறைகள் ஆகியவற்றிற்கெதிரான போராட்டாங்களை திசை திருப்புவதற்காக நடத்தப்படுகின்றது. ஏகாதிபத்தியங்களுக்கும், பெரு முதலாளிகளுக்கும் கோடிக்கணக்கில் சலுகை தந்து விட்டு, அதே சமயம், மக்கள் மீது அதிக வரிகள் போடப்படுகின்றன. ரேசன் உட்பட அனைத்து மானியங்களும் குறைக்கப்படுகின்றன. இதற்கு மக்கள் கடும் எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர். இப்போதோ யுத்தச் செலவுகளைக் காரணங்காட்டி மக்களை இன்னும் ஒட்டச் சுரண்ட வழி ஏற்பட்டு விட்டது. (இதை எதிர்த்தால் நீங்கள் தேசத்துரோகி ஆகிவிடுவீர்கள்!) மேலும் மக்களிடம் முழுமையாக நம்பிக்கை இழந்துவிட்ட அயோக்கியர்களான ஓட்டுக் கட்சிகள், இந்தத் தேர்தலில் 'தேச பக்தியை' வைத்து மக்களை ஏமாற்றப் பார்க்கின்றனர். சொந்த நாட்டிலேயே மக்களைப் படுகொலை செய்யும் பெண்களைப் பாலியல் பலாத்காரம் செய்யும் ராணுவத்தையும் போலீசையும், இப்போரின் மூலம் மக்களின் பாதுகாவலர்களாக காட்ட முயற்சிக்கின்றனர். இந்து மதவெறியைத் தூண்டும் பா.ஜ.க. இந்தப் போரைப் பயன்படுத்தி பாகிஸ்தான் எதிர்ப்பு மற்றும் முஸ்லீம் எதிர்ப்பு வெறியைத் தூண்டி ஆதாயம் பெற நினைக்கிறது. இவைதான் இந்த யுத்தத்தின் உண்மை நோக்கங்கள்!

நாட்டை அமெரிக்கா முதலான ஏகாதிபத்தியங்களிடம் அடகு வைக்கும் இந்திய ஆட்சியாளர்கள் தேச பக்தர்கள் அல்ல! இவர்கள் நடத்தும் போரும் கூட தேசத்தை காக்க அல்ல. தமது சுரண்டலையும், லாப வெறியையும் ஆதரிக்கத்தான். இன்று இவர்களால் கிளப்பப்படும் தேசிய வெறி நாளை தமது பிரச்சனைகளுக்காகப் போராடும் மக்கள் மீது கொடூர ஒடுக்குமுறையை ஏவுவதற்கான முன் த யாரிப்பே! ஆம், அது இன்றே தொடங்கி விட்டது! நெல்லையில் தாமிரபரணி ஆற்றங்கரையில் தமது உரிமைக்காகப் போராடிய தொழிலாளர்களை ஆற்றில் தள்ளிவிட்டுக் கொன்றுள்ளது தமிழ்நாடு காவல்துறை! பீஹாரிலோ ராணுவ ஆள் சேர்ப்பு நடக்கும் போது நடந்த துப்பாக்கிச் சூட்டில் 50க்கும் மேலானோர் இறந்துள்ளனர். இவர்களின் தேசபக்திக்கு இதைவிடச் சிறந்த எடுத்துக்காட்டு வேண்டுமா?

மொத்தத்தில் இந்திய ஆட்சியாளர்கள் தமது சுயநலத்துக்காக நடத்தும் யுத்தத்தில் பாதிக்கப்படப்போவது மக்கள் தான். மேலும், காஷ்மீர் மக்கள் மீதான கொடூர ஒடுக்குமுறையும் கூட இந்த யுத்தத்தால் மூடி மறைக்கப்படுகின்றது. எனவே, யுத்ததங்களுக்கெதிராகவும், காஷ்மீர் மக்கள் மீதான ஒடுக்குமுறைக் கெதிராகவும் குரல் கொடுப்பது நம் அனைவரின் கடமையல்லவா!

- ஸ்வர்ணலதா



படிப்பகம்

www.padippakam.com

# கார்கில் யுத்தம் - யாருக்காக?

கடந்த சில மாதங்களாக நடந்து வந்த கார்கில் போர் முடிந்து விட்டது. இது பல்லாயிரம் கோடி ரூபாய்களையும் பல உயிர்களையும் விழுங்க விட்டுள்ளது. இந்தப் போரின்போது நமது பெருமைமிகு அரசியல்வாதிகள் தேசபக்தி வசனங்களைப் பேசி வந்தனர். நம்மைக் காப்பதற்காக எல்லையில் போர் நடப்பதாகக் கூறினர் இறுதியாக பாகிஸ்தானையும், அதன் ஆதரவு பெற்ற தீவிரவாதிகளையும் விரட்டி வெற்றிபெற்று விட்டதாகச் கூறுகின்றனர். (இதில் பஞ்சாயத்து செய்தது அமெரிக்கா என்பது வேறு விசயம்) உண்மையில் இந்தப் போர் நம்மைக் காப்பாற்ற நடந்ததா? போருக்கு காரணமான காஷ்மீரில் இந்திய ஆட்சியாளர்கள் செய்வதென்ன? இவை போன்ற பல கேள்விகள் நம்முன் எழுகின்றன.

முதலில் காஷ்மீர் குறித்து பார்ப்போம் காஷ்மீரை (அதன் மன்னன் ஹரிசிங்) இந்தியாவோடு இணைத்தபோது, அதற்கு மக்களின் ஒப்புதலைப்பெற கருத்தறியும் வாக்கெடுப்பு நடத்தப்படும் என்று நேரு வாக்குறுதி கொடுத்தாரே! ஐ.நா.சபையிலும் அதே வாக்குறுதி வழங்கப்பட்டதே! இன்றுவரை, இந்திய ஆட்சியாளர்கள் இந்த வாக்கெடுப்பை நடத்தாதது ஏன்? அவ்வாக்கெடுப்பு நடத்தக் கோரும் காஷ்மீர் மக்களை தேசத்துரோகிகள் என்று கூறுவதேன்?

காஷ்மீரில் தமது விடுதலை கோரிப் போராடும் மக்களைஇராணுவத்தை வைத்து படுகொலை செய்து வருகிறது இந்திய அரசு. அமைதியான ஊர்வலங்கள் மீது ராணுவம் சுட்டு இறந்த மக்களின் எண்ணிக்கை மட்டுமே பல ஆயிரம். கடந்த 10 வருடங்களில் மட்டும் ராணுவத்தால் கொல்லப்பட்டவர்கள் 60,000 பேர். பல ஆயிரம் பெண்கள் இந்திய ராணுவத்தால் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டுள்ளனர். 6 லட்சம் ராணுவத்தினர் காஷ்மீரில் குவிக்கப்பட்டுள்ளனர். இதையெல்லாம் மீறி அன்றாடம் காஷ்மீர் மக்கள் இந்திய அரசுக்கெதிராக போராடி வருகின்றனர். கார்கில் போரின் போது கூட இந்திய ராணுவத் தாக்குதலுக்கெதிராக வந்ததும், போராட்டங்களும் நடத்தப்பட்டுள்ளன. இதையெல்லாம் நடப்பது இந்திய அரசின் துரோகத்திற்கெதிராக அல்லவா?

அடுத்ததாக, பாகிஸ்தான் காஷ்மீரில் தலையிடுவதாக இந்திய ஆட்சியாளர்கள் கூக்குரலிடுகின்றனர். இது உண்மை தான். ஆனால் இந்திய அரசு 1976 போரில், பங்களாதேசைப் பாகிஸ்தானிலிருந்து பிரித்ததே! ஈழப் பிரச்சனையில் முதலில் போராளிகளுக்கு ஆயுதமும், பயிற்சியும் வழங்கிவிட்டு, பின்னர் விடுதலைப் புலிகள் இந்திய அரசிற்கு கட்டுப்படாததால், 'அமைதிப்படை'யை அனுப்பி ஆயிரக்கணக்கான தமிழர்களைக் கொன்று, இன்னும் ஆயிரம் தமிழ்ப்பெண்களை பாலியல் பலாத்காரம் செய்ததே! இன்று கூட, ஜார்ஜ் பெர்னான்டஸ் உட்பட பல அமைச்சர்கள் பர்மாவில் தனிநாடு கோரும் போராளிகளை நேரடியாக ஆதரிக்கின்றனரே! இதெல்லாம் என்ன? தலையீடு இல்லையா? இந்திய ஆட்சியாளர்கள் செய்யும் போது மட்டும் அது நியாயமாகி விடுமா?

இந்தக் கேள்விகள் ஒரு புறம் இருக்கட்டும். காஷ்மீரை எடுத்துக் கொண்டால் கூட, அதைத் துண்டாடி உள்ள இந்திய அரசும், பாகிஸ்தான் அரசும் முழுக் காஷ்மீரையும் கைப்பற்றத் துடிப்பது தானே பல போர்களுக்குக் காரணம்! இந்திய அரசின் துரோகத்தையும், கொடூர இராணுவ ஒடுக்குமுறையையும் எதிர்த்துப் போராடும் காஷ்மீர் மக்களுக்கு ஆதரவு தருவதாகக் காட்டிக் கொண்டு, பாகிஸ்தான் காஷ்மீரை

(தொடர்ச்சி 39-ம் பக்கம்)



படிப்பகம்